பக்கங்கள்: 13

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 18 செவ்வாய்க்கிழமை 03.11.2020 கதிர் 359

### இனி இது ரகசியம் அல்ல!

முன்னாள் தமிழரசுத் தூண் ஒருவர் வெளிநாட்டில் இருந்து நேற்று மாலை திடீரென அழைப்பு எடுத்தார். தமிழரசின் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் மீது செம கடுப்பில இருந்தார்.

"இப்ப ஏன் அவசரப்பட்டு கூட்டமைப்புக்குப் பக்கம் 02

# வலுவடையும் ராஜபக்ஷ குடும்ப ஆட்சி! நாடாளுமன்றம் வருகின்றார் பஸில்!!

## பொருளாதார அமைச்சுப் பதவியும் காத்திருப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ இன்று அல்லது எதிர்வரும் 12ஆம் திகதி தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கவுள்ளார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்திருக்கும் நிலைமையில் இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டுள்ள பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதை தென்னிலங்கை ஊடகம் ஒன்று நேற்று செய்தியாக வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த பக்கம் 02

# தப்பிய கிளிநொச்சியையும் விட்டுவைக்காத கொரோனா

## கண்டாவளையில் முதல் தொற்றாளர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவம்பர் 03

கிளிநொச்சி மாவட்டம், கண்டாவளைப் பிரதேசத்தில் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் உணவகம் ஒன்றில் பணியாற்றிய இவர், கடந்த 28ஆம் திகதி கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள தர்மபுரம் கிராமத்துக்கு வருகை தந்துள்ளார்.

குறித்த நபர் வருகை தந்தவுடன் அவர் உடனடியாக சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். பக்கம் 02

## கொரோனா சாவு எண்ணிக்கையை 21ஆகக் குறைத்தது ராஜபக்ஷ அரசு!

### பாணந்துறை தற்கொலையாளியின் மரணம் 22 ஆவது இழப்பாகக் கருதப்பட மாட்டாது

கொரோனா வைரஸ் தொற்று நோயுடன் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட நபரின் மரணம் நாட்டின் 22ஆவது கொரோனா மரணமாகக் கருதப்படாது என ராஜபக்ஷ அரசு நேற்று மாலை அறிவித்துள்ளது.

நேற்றுக் காலை இவரது மரணம் 22ஆவது கொரோனா மரணமாக அறிவிக்கப்பட்ட நிலையில் அதனை அரசு மீளப் பெற்றுள்ளது. பக்கம் 02

## நடைபாதை வியாபாரிகள் இருவர் சிக்கினர்!

இலங்கையில் கொரோனா 2 ஆம் அலை உருவான மிக ஆபத்தான மினுவாங்கொட பகுதியிலிருந்து பக்கம் 02

## யாழ்.பல்கலையில் பரீட்சைகளின் முடிவுகள் இனி உரிய நேரத்தில் வரும்

### இறுக்கமான நடைமுறைகள் அறிமுகம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் உரிய காலப்பகுதிக்குள் வெளிவருவதை உறுதிப்படுத்தும் வகையிலான புதிய நடைமுறை ஒன்றை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா அறிமுகப்படுத்தியுள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகள் உரிய காலப்பகுதிக்குள் வெளிவராததனால் பட்டமளிப்பு விழா காலதாமதடைதல் மற்றும் மாணவர்கள் பக்கம் 02

## மூடையை கட்டுகிறார் தேசப்பிரிய



தேசிய தேர்தல்கள் ஆணையகத்தின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவின் பக்கம் 11

## கிளிநொச்சி தொற்றாளரின் பயண வழித்தடம் வெளியீடு

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டம், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தர்மபுரம் கிராமத்தில் கொரோனாத் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்ட நபர் பயணித்த பஸ் வழித்தடம் சுகாதாரத் துறையினரால் வெளியிடப்பட்டுள்ளது.

மயூரா ஹோட்டல், இல 46, கதிரேசன் வீதி, கொழும்பு 13 இல் இருந்து பயணித்த குறித்த நபர் கடந்த 25ஆம் திகதி காலை 10 மணிக்கு பக்கம் 02

## 'கொரோனா' வைரஸ் வீரியம் நேற்றும் 275 பேர் அடையாளம்

இலங்கையில் நேற்று 275 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சமூகத்தில் இருந்தவர்களுக்கும், தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தவர்களுக்குமே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 335ஆக உயர்வடைந்துள்ளது. அவர்களில் 6 ஆயிரத்து பக்கம் 02

## புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலை பெண் ஊழியருக்குத் தொற்று இல்லை

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய பெண் ஊழியரின் பி.சி.ஆர். பரிசோதனை முடிவு வெளியாகியுள்ளது.

நேற்று யாழ். பரிசோதனைக்கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது குறித்த முடிவு வெளியாகியுள்ளது.

குறித்த பெண்ணுக்கு தொற்று இல்லை என்று தொற்று முடிவு தெரிவிப்பதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பெண்ணின் தந்தையார் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையிலேயே அவருக்குப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் ஆடைத் தொழிற்சாலையும் பக்கம் 02

## பாடசாலை விடுமுறை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிப்பு

எதிர்வரும் நவம்பர் 09ஆம் திகதி முதல் ஆரம்பமாகவிருந்த, அரச பாடசாலைகளின் 3ஆம் தவணை கல்வி நடவடிக்கைகள் மேலும் இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: –

சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைக்கு அமைய, பாடசாலைகளை ஆரம்பிப்பது மேலும் இரு வாரங்களுக்கு ஒத்திவைக்கப் பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*பொதுச் செயலாளர் எண்டு மாவையை அறிவிக்க வெளிக்கிட்டவையள்...? இருக்கின்ற மிச்ச சொச்சப் பெயரையும் நாசமாக்கித் தமிழரசை அழிக்கப் போகின்றீர்களோ?"* – என்று சீறினார்.

நான் விட்டுக் கொடுக்கவில்லை. தமிழரசினதும் சி.வீ.கே.சிவஞானத்தினதும் சட்டத்தரணி போல மாறி அவருக்குப் பதிலடி கொடுத்தேன். கடைசியில் நான் கொடுத்த பதிலடியில் நானே மாட்டிக் கொள்ள வேண்டியதாயிற்று.

*"என்னபிழை...? அதுதான் சிவஞானம் தெளிவாக விளக்கியிருக்கின்றாரே...! சட்டத் தேவையின்படி கூட்டமைப்புக்கு ஒரு பொதுச் செயலாளர் தேவை.... அதை அனைத்துப் பங்காளிக் கட்சித் தலைவர்களின் இணக்கத்துடன்தான் செய்தோம் எண்டு அவர் சொல்லுறார். அது உண்மைதான். ஏகமனதாகத்தான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது."* – என்றேன் நான்.

மேலும் கொஞ்சம் விளக்கமாக *"உந்த முடிவை சம்பந்தன் எதிர்க்க மாட்டார் என்றும் சிவஞானம் உறுதியாகச் சொல்லியிருக்கின்றார் எல்லோ...! சம்பந்தன், எதிர்க்க மாட்டார் எண்டால் சுமந்திரனும் எதிர்க்க மாட்டார்தானே...!"* – என்று அதிகப்பிரசங்கித்தனமாக நான் எனது 'லெக்ஸரை' நீட்டி முழக்கினேன்.

அவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. *"எனை விசர்க்கதை கதைக்கிறீர்?"* – என்று என்னை ஒரு பிடிபிடித்தார்.

*"உப்பிடி ஒரு விடயம் இருக்கு, பொதுச் செயலாளரை நியமிக்க வேண்டியுள்ளது என்றெல்லாம் தெரியாமல்தான் சம்பந்தன், சுமந்திரன் எல்லாம் அரசியல் நடத்திற மாதிரியும், உவர் சிவஞானத்தாருக்குத்தான் சட்டமும், ஓட்டையும் தெரியும் எண்ட மாதிரியும் பேசுறதை முதலில் நிறுத்தும். உதுக்குள்ளை விசயம் இருக்கு. உம்முடைய ஆள் சிவஞானத்தார் எல்லாவற்றையும் போட்டுடைத்து, கடைசியிலை தமிழரசையும் நாசமாக்கப் போகின்றார்"* – என்றார்.

அவர் விசயம் எண்டதும் என் செய்தி மூக்கு நீண்டு விட்டது. சிவஞானம் பக்கம் நின்று பேசினால் விசயம் வெளியே வராது என்று புரிந்து கொண்டு மெல்ல பிளேட்டை மாற்றினேன்.

*"இல்லை சிவஞானத்தார், உந்த விடயத்தை விளக்கிப் பேட்டி கொடுத்தவர். அதைத்தான் நான் சொன்னனான்"* – என்று சமாளித்தேன்.

*"உங்க பாரும், நீர் பத்திரிகைக்காரர். கட்சி அரசியல் உமக்கு விளங்காது...!"* – என்ற பீடிகையுடன் அவர் தொடங்கினார்.

*"கூட்டமைப்பைப் பதிவு செய்யிற விண்ணப்பம் 2010இல் தேர்தல் ஆணையத்துக்கு வழங்கப்பட்டது. அதிலை கூட்டமைப்புத் தலைவராக சம்பந்தன் குறிப்பிடப்பட்டிருந்தார். ரெலோவின் சார்பில் செல்வத்தின் பெயரும், ஈ.பி.ஆர். எல்.எவ். சார்பில் சுரேஷ் பிறேமச்சந்திரனின் பெயரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் மாவை சேனாதிராசாவின் பெயரும் வழங்கப்பட்டன. போதாக்குறைக்கு கூட்டமைப்பின் உப தலைவராக அப்போது மாநாகர சபை உறுப்பினராக இருந்த மேரியம்மாவின் பெயரும், கூட்டமைப்பின் பொருளாளர்களாக எம்.ஏ.சுமந்திரன், செல்வராசா (அப்போதைய மட்டக்களப்பு எம்.பி.) ஆகியோரின் பெயர்களும் வழங்கப்பட்டன. கூட்டமைப்பின் தொடர்பாளராக – செயலாளர் போன்று கடிதப் போக்குவரத்து அலுவலராக – இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் (மாவை சேனாதிராசாவும்) இருப்பார் என்று தேர்தல் ஆணையத்துக்கு எழுத்து மூலம் கொடுக்கப்பட்டது. இதுதான் உண்மை நிலைவரம்.*

*"அந்தக் கடிதத்தின் படி இப்போது கூட்டமைப்பின் செயலாளர், இலங்கைத் தமிழரசின் பதில் பொதுச் செயலாளராக இருக்கும் டாக்டர் சத்தியலிங்கம்தான். இதற்கிடையில் ஏன் மாவை சேனாதிராசா என்ற நியமனமும் அறிவிப்பும்?"* – என்று கேட்டார். இன்னொரு விடயத்தையும் அவர் சொன்னார்.

*"அன்று யாழ். மார்ட்டின் வீதி தமிழரசுக் கட்சி அலுவலகத்திலை கூட்டமைப்புக் கூட்டம் நடந்த போது கூட்டமைப்புக்கு ஒரு செயலாளர் நியமிக்க வேண்டும் என்று கூறிய உம்மட சிவஞானத்தார், அதனை நிரூபிக்க உடனே வாகனத்திலை வீட்டுக்கு ஓடிப்போய் அங்கிருந்து தேர்தல் ஆணைக் குழுவினரை விதிமுறைப் படிவத்தை அவசர அவசரமாக எடுத்து வந்து, சித்தருக்கும் மற்றையவர்களுக்கும் ஆங்கிலத்திலை இருந்து வாசிச்சுக் காட்டினவர் எல்லோ...?"* – என்று கேட்டார்.

*"ஓம். ஓம். எனக்கும் தெரியும்"* – என்றேன் நான்.

*"அதை அவர் பிழையா விளங்கிப் போட்டார் போலை...!"* – என்றார் அவர்.

நான் உடனே இடைமறித்தேன்.

*"மனுஷன் விசயம் தெரிந்த ஆள். ஆங்கிலம் உட்பட மூன்று மொழியும் அத்துப்படி. தகுதி பெற்ற கம்பனிச் செயலாளர். உந்த சட்ட விதிகள் எல்லாவற்றையும் கரைச்சுக் குடிச்சவர். மழைக்கால இருட்டு என்றாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது."* – என்றேன் நான்.

*"ஆனைக்கும் அடி சறுக்கும்"* – என்றார். மேலும் விளக்கினார்.

*"கூட்டின் செயலாளர், தமது கூட்டின் நிர்வாகிகளின் பட்டியலை அவ்வப்போது தேர்தல் ஆணையத்துக்குத் தவறாது அனுப்ப வேண்டும் என்றுதான் அந்த விதி உள்ளதே தவிர, செயலாளர் நியமிக்கப்பட்டு அறிவிக்கப்பட வேண்டும் என்று அந்த விதி இல்லை"* – என்றார் அவர்.

அவருடன் விவாதிப்பதற்கு என்னிடம் கையில் கருத்து ஆயுதங்கள் இல்லை. வாயை மூடினேன்.

*"பிழையான விதி ஏற்பாட்டை, தவறாக மொழி பெயர்த்து, தேவையில்லாத குழப்பத்தை ஏற்படுத்தி விட்டார்கள். உது உமக்கு விளங்கினால் சரி"*– என்று ரிஸீவரை வைத்தார் அவர்.

சி.வீ.கே.சிவஞானத்தின் விளக்கம் வருமானால் அந்தத் தமிழரசுத் தூணுக்கும் வாசகர்களுக்கும் அதைப் பதிலாகப் பதிவிடுவேன்.

இதற்கிடையில் –

நேற்றிரவு, யாழ்.நகரப் பகுதியில் சுமந்திரனின் இல்லத்தில், மாவை – சுமந்திரன் சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரியவந்தது. அகமத்தாக அந்தச் சமயத்தில் சிறிதரன் எம்.பியும், சார்ள்ஸ் நிமலநாதன் எம்.பியும், சுமந்திரன் வீட்டுக்குச் செல்ல, சந்திப்பு மேசை விரிவடைந்திருக்கின்றது.

அண்மைக் காலத்தில் தமிழரசுக்குள் ஏற்பட்ட குத்து வெட்டுகள், குழப்பங்கள் அங்கு பிய்த்து, உதறப்பட்டன எனத் தெரிகின்றது. குரல் உயரத்திப் பேசிய சத்தங்களைச் செவிமடுக்க முடிந்த மெய்க் காவலர்களுக்கு கூட்டம் முடிந்து வெளியேறும் சமயம் நால்வருக்கும் இடையில் இருந்த நெருக்கம், புரிந்துணர்வு, நட்புறவைப் பார்க்க அதிசயமாக இருந்ததாம்.

குரல் உயர்த்தி மோதியவர்கள், நட்புறவில் பிரிகிறார்களே...! இதெல்லாம் அரசியலில் சகஜமப்பா.

இந்தச் சந்திப்புக்கு சற்றுத் தாதமதாக வந்து, தள்ளி நின்று அதனைப் பார்வையிட்ட மாவையின் மகனுக்கும் இப்படித்தான் தோன்றியிருக்கும்.

இந்தச் சந்திப்பு மாவைக்கு யதார்த்த நிலையை உணரப் பண்ணியிருக்கும் என்று நினைக்கிறேன்.

முரண்பாடுகளையும் சந்திப்புக் குறித்த தகவல்களை அம்பலப்படுத்தி, புதிய முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் குசும்புத்தனம் வேண்டாம். அதன் விவரங்களை அப்படியே விட்டு விடுவோம்.

– மின்னல் –

## கொரோனா சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி இலங்கையில் இதுவரை பதிவான கொரோனா மரணங்கள் 21ஆகக் கருதப்படும்.

பாணந்துறையைச் சோந்த 27 வயது நபரொருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்ய நிலையில் அவரது உடலிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளைப் பரிசோதனை செய்ததில் அவா கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்தே இந்த மரணம் 22ஆவது கொரோனா மரணமாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (முன்னர் வந்த செய்தி 8ஆம் பக்கத்தில்)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா – கொழும்பு இ.போ.ச. பஸ்ஸில் பயணித்து மாலை வவுனியாவை வந்தடைந்துள்ளார்.

அங்கிருந்து மாலை 4 மணிக்கு வவுனியா – யாழ்ப்பாணம் தனியார் பஸ்ஸில் பயணித்து பரந்தன் சந்தியில் இறங்கியுள்ளார்.

அங்கிருந்து மாலை 6.15 மணிக்கு முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸில் பயணித்து தருமபுரத்தில் இறங்கியுள்ளார்.

குறித்த வழித்தடத்தில் பயணித்தவர்கள் சுகாதாரத் துறை அதிகாரிகளைச் சந்தித்து தங்களை அடையாளப்படுத்துமாறு சுகாதாரத் துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வலுவடையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொட்டகொட தனது பதவியை இராஜிநாமா செய்து பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்பதற்கு வழி வகுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறு பதவியேற்கும் பட்சத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுப் பதவியும் பஸில் ராஜபக்ஷவுக்கு வழங்கப்படலாம் எனவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினரான ஹர்ஷ டி சில்வா நேற்று மாலை வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவு ஒன்றிலும் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இன்று அல்லது சில இன்னும் தினங்களில் பஸில் எம்.பியாகப் பதவியேற்பார் என ஹர்ஷ தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## பாடசாலை விடுமுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

இதேவேளை, மீண்டும் இரு வாரங்களின் பின், பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் சுகாதார அமைச்சுடன் கலந்தாலோசித்து, அதற்கமைய முடிவெடுக்கப்படும்.

அதுவரையில் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில், மாகாண கல்விப் பணிப்பாளர்களுடன் நேற்றுப் பிற்பகல் இரண்டரை மணித்தியாலங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.

கடந்த முறை போன்று படிப்படியாக பாடசாலைகளை ஆரம்பித்தல், இணையம் உள்ளிட்ட தொலைதூரக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் மாகாணங்களில் காணப்படும் வளங்களின் அடிப்படையில் தொலைதூர கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

எதிர்வரும் ஜனவரி 18 – 26 வரை இடம்பெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பிலும், எவ்வளவு தூரத்துக்குப் பாடங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளது என்பது தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டன.

தொலைக்காட்சி, வானொலி மூலம் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டன – என்றார்.

## நடைபாதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் வந்து எந்தவிதமான பதிவுகளும் இல்லாமல் நடைபாதை வியாபாரம் செய்துவந்த இருவர் யாழ்.வடமராட்சி – மாலைச்சந்தை பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் நேற்று மாலை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்ததாக கூறும் இவர்கள் யாழ். நகரில் ஐந்துசந்தி பகுதியில் வாடகைக்கு அறை ஒன்றை எடுத்து தங்கியிருந்துள்ளமையுடன், எந்தவிதமான பதிவுகளையும் மேற்கொள்ளவில்லை.

இந்நிலையில் நேற்று மாலை வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, பிரதேச மக்கள் நடத்திய விசாரணையில் இவர்கள் மினுவாங்கொட ஆபத்து வலயத்திலிருந்து வந்துள்ளமை கண்டறியப்பட்டிருக்கின்றது.

இதனையடுத்து கரவெட்டி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் படையினர், பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் அடையாளப்படுத்தப்பட்ட நபர்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் முயற்சித்துள்ளனர்.

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்காலிகமாக மூடப்பட்டது.

இதையடுத்து குறித்த பெண் பணியாற்றிய ஆடைத்தொழிற்சாலை இன்று திறக்க அனுமதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் இறுக்கமான நடைமுறையின் அடிப்படையிலேயே அது திறக்க அனுமதிக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் ஏழு பேர் வெளி மாவட்டங்களில் இருந்து நேற்றுமுன்தினமும் நேற்றும் புதுக்குடியிருப்பு திரும்பியுள்ளனர்.

அவர்கள் ஏழு பேரும் அவர்கள் தங்கியுள்ள இடங்களிலே தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்களைத் தொழிற்சாலைக்குள் நுழைவதற்கு அனுமதிக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தப்பிய கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டாவளை பிரதேச வைத்திய அதிகாரியும் பொதுச் சுகாதார பரிசோதகரும் விழிப்பாகச் செயற்பட்டமையால் உடனடியாக குறித்த நபர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அவர் பணியாற்றிய உணவக உரிமையாளர் மற்றும் அங்குள்ள கடமையாற்றிய சில பணியாளர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டமையையடுத்து இவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கொரோனாத் தொற்றாளங்கள் இனங்காணப்பட்ட நிலையில் கிளிநொச்சி மாவட்டம் மாத்திரமே கொரோனாத் தொற்றாளர்கள் இன்றிய மாவட்டமாக இருந்த நிலையில் நேற்று முதலாவது கொரோனாத் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இருப்பினும் பொதுமக்கள் அச்சம் கொள்ளும் அளவுக்கு நிலைமைகள் இல்லை எனவும், வயோதிபர்கள், சிறுவர்கள், கர்ப்பிணிகள் ஆகியோர் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இருக்குமாறும், அவசிய தேவைகளைத் தவிர்ந்து வெளியில் செல்வதைத் தவிர்க்குமாறும் பொதுமக்களிடம் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

## யாழ்.பல்கலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் வாய்ப்புக்களை பெறமுடியாமல் சிரமங்களை எதிர்நோக்குதல் பற்றிக் கடந்த முதலாம் திகதி, ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் கணக்காய்வாளர் திணைக்கள அறிக்கை மூலம் துணைவேந்தரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து, அவர் இந்தப் புதிய இறுக்கமான நடைமுறையை பேரவைக் கூட்டத்தில் வைத்துப் பீடாதிபதிகளுக்கு அறிவித்தார். இதன்படி –

ஒவ்வொரு பாடங்களுக்கான பரீட்சை வினாத்தாள்கள் தயாரிக்கப்படும் நேரத்திலேயே, வினாத்தாள்களை மதிப்பீடு செய்தல், இரண்டாம் மதிப்பீடு, துறைத்தலைவரின் அனுமதி, பீடாதிபதியின் அனுமதி, பரீட்சைக் கிளையிடம் பெறுபேறுகள் ஒப்படைக்கப்படுதல் ஆகியவற்றுக்கான திகதிகளையும் முற்கொண்டே நிர்ணயிக்குமாறு துணைவேந்தர் அறிவுறுத்தியுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின்படி இரண்டு மாத காலப்பகுதிக்குள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாவதை உறுதிப்படுத்தும் வகையில் இவை அனைத்தும் இரண்டு மாத காலப்பகுதிக்குள் நடைபெறுவதைப் பீடாதிபதிகள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் பணித்துள்ளார்.

உரிய காலப்பகுதிக்குள் மதிப்பீடு செய்து முடிக்கப்படாத விடைத்தாள்களை அந்தந்த விரிவுரையாளரிடமிருந்து மீளப் பெற்று, பல்கலைக்கழகத்துக்கு உள்ளேயோ, அல்லது வேறு பல்கலைக்கழகங்களின் துறைசார்ந்த பொருத்தமான விரிவுரையாளர்கள் மூலமாகவோ மதிப்பிட்டு உரிய காலத்துக்குள் நிறைவுசெய்ய ஏற்பாடு செய்யுமாறும் துணைவேந்தர் பணித்துள்ளார்.

உரிய காலப்பகுதிக்குள் விடைத்தாள் திருத்தும் பணிகளை நிறைவுசெய்யாத விரிவுரையாளர்களுக்கு மதிப்பீட்டுக்கான கொடுப்பனவுகளை இரத்துச் செய்வதுடன், தண்டப்பணம் அறவிடும் பொறிமுறை ஒன்றும் அறிமுகப்படுத்தப்படும் என்றும் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பீடாதிபதிகளுக்குக் கண்டிப்பாக அறிவுறுத்தியிருக்கிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காலாதிகாலமாக பரீட்சைப் பெறுபேறுகள் உரிய காலப்பகுதிக்குள் வெளிவராமை குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக பல தரப்புக்களாலும் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில் இந்தப் புதிய நடைமுறை மூலம் எதிர்காலத்தில் குறைபாடு நிவர்த்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 'கொரோனா' வைரஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

65 தொற்றாளர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 5 ஆயிரத்து 249 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 21 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர்.

# சுகாதார அமைச்சரும் அரசும் தோல்வியுற்றமை தெளிவானது!

## ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு



சுகாதார அமைச்சரும் அரசாங்கமும் தோல்வியுற்றமை தற்போது தெளிவாகியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தனது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் எனக் கூறினார்.

ஒக்ரோபர் 4 ஆம் திகதி மினுவாங்கொடையில் உள்ள ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர் ஒருவர் கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டபோது, அரசாங்கம் உடனடியாகச் செயற்பட்டிருந்தால், நாட்டின் தற்போதைய நிலைமை தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இருப்பினும் அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கி ஒக்ரோபர் 22 ஆம் திகதி வரை நாட்டை முடக்காமல் இருந்தது என்றும் ஹரின் பெர்னாண்டோ குற்றம் சாட்டினார்.

மேல் மாகாணத்தில் விதிக்கப்பட்ட ஊரடங்கு இன்று (நேற்று) அதிகாலை 5 மணிக்கு நிச்சயமாக நீக்கப்படும் என்று இராணுவத் தளபதி கடந்த வாரம் கூறியமையையும் ஹரின் பெர்னாண்டோ சுட்டிக்காட்டினார்.

இதேவேளை ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மக்கள், உணவு மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு எந்தவித சமூகப் பரவல் இல்லை எனத் தெரிவிக்கப்படும்போதும் இதுவரை கொரோனாத் தொற்று நோயாளிகள் பதிவாகாத ஒரே மாவட்டமாக கிளிநொச்சி மட்டுமே இருக்கின்றது எனவும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

## சுவாசக் கோளாறினால் அவதியா? உடன் வைத்தியசாலை செல்லவும்!

சுவாச கோளாறால் அவதியுறும் நோயாளர்களை வைத்தியசாலையில் சேர்க்குமாறு சுகாதாரப் பிரிவு பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

சுவாச கோளாறு உள்ள நோயாளர்களுக்குக் கொரோனாத் தொற்று ஏற்படுமாயின், நிலைமை மேலும் மோசமடையக்கூடும் என்பதால் அவர்களை உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்குமாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலப்பகுதியில் நோய் அறிகுறிகள் இருக்குமாயின், 0117 966 366 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சுற்றுலா விடுதிகள், முகாம்கள் மறு அறிவித்தல் வரை பூட்டு!

நாடு முகங்கொடுத்துள்ள கொரோனா வைரஸ் தொற்று பரவலிலிருந்து, நாட்டையும், நாட்டு மக்களையும் மீட்டெடுப்பதற்கு அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இதனையடுத்து, வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் உள்ள அனைத்து சுற்றுலா விடுதிகள் மற்றும் அதன்கீழ் இயங்கும் முகாம்கள் மறு அறிவித்தல் வரையில் மூடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தகவலை வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அத்தியாவசியப் பொருள்கள் வீடுகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்!

கொழும்பு, நவ.03

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மக்களுக்கான அத்தியாவசியப் பொருள்களை வீடுகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று (திங்கட்கிழமை) முதல் ஆரம்பமாகியுள்ளது.

பொலிஸ் நிலையங்களில் இதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் என பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதன்படி கொழும்பு மாவட்டத்தில் இதற்காக 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வர்த்தகர்கள், தம்மை பதிவு செய்துள்ளனர் என கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்தார்.

அதேபோல பிரதேச செயலகங்கள் ஊடாக மக்களின் வீடுகளுக்கு அத்தியாவசியப் பொருள்களை விநியோகம் செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக களுத்துறை மாவட்ட செயலாளர் பிரசன்ன கினிகே தெரிவித்துள்ளார். இதற்காக பலவர்த்தகர்கள் பதிவுசெய்துள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் கம்பஹா மாவட்டத்திலும் பிரதேச செயலாளர் அலுவலகம் ஊடாக பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன எனபதும் குறிப்பிடத்தக்கது.

## மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்கு அமைச்சர் வியாழேந்திரன் விஜயம்!

மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் மட்டக்களப்பு வந்தாறுமூலையில் அமைந்துள்ள பிராந்தியக் காரியாலயத்துக்கு நேற்று (திங்கட்கிழமை) இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டார்.

அரவது அமைச்சின்கீழ் வருகின்ற இந்தக் கூட்டுத்தாபனத்தால் தற்போதைய நிலையில் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பாகவும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் பற்றியும் கூட்டுத்தாபனத்தின் உதவிப் பிராந்திய முகாமையாளர் ம.மலைமகள், வெளிக்கள உத்தியோகத்தர் பி.சிவநாதன் ஆகியோரிடம் கேட்டறிந்து, மரமுந்திரிகை உற்பத்திகளையும் பார்வையிட்டார்.



மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பாக இதன்போது அமைச்சருக்கு உத்தியோகஸ்தர்களால் எடுத்துரைக்கப்பட்டமையுடன், அதனை விஸ்தரிப்பது தொடர்பிலும், தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக விளக்கமளித்தனர்.

## திருகோணமலையில் வைத்தியருக்கு கொரோனா!

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியரொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

அந்த வைத்தியர், விடுமுறைக்காக சென்று கடந்த 27 ஆம் திகதி வைத்தியசாலைக்கு வருகை தந்தார். அதனைத் தொடர்ந்து, அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள் ளப்பட்டது.

பி.சி.ஆர் .பரிசோதனை முடிவுகள் தற்பொது கிடைக்கப்பெற்றுள்ளன. அதில், அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு, கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர். இவர், திரு கோணமலை பொது வைத்தியசாலையில் 5 ஆம், 6 ஆம் வார்ட்டில் கடமையாற்றியும் உள்ளார்.

இந்நிலையில், இந்த வைத்தியரை ஐனூர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளோம். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நாலு பிரிகேடியர்களுக்கு பதவி உயர்வு கிடைத்தது

இராணுவத்தின் நான்கு மூத்த பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரல்களாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் பாதுகாப்பு அமைச்சின் பரிந்துரையின் பேரில் இந்த பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, பிரிகேடியர் இந்தி ரஜித் கந்தனராச்சி விவசாயம் மற்றும் கால்நடை நிலையத்தின் பணிப்பாளர், பிரிகேடியர் சந்தனா விஜயசுந்தேரா, பொது அலுவலர் கட்டளை, பொறியாளர் பிரிவு, 52 பிரிவின் பொது அதிகாரி கமாண்டிங் பிரிகேடியர் கிட்சிரி லியானகே மற்றும் துணை கமாண்டன்ட் பிரிகேடியர் கிறிஸ்டி ஜெயசிங்க ஆகியோரே மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

## மட்டக்களப்பு – கொழும்பு ரயில் சேவைகள் நிறுத்தம்

கொரோனா வைரஸ் இரண்டாம் அலையைத் தொடர்ந்து மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டுள்ளதால் மட்டக்களப்புக்கும் கொழும்புக்குமிடையிலான அனைத்து ரயில் சேவைகளும் மறு அறிவித்தல் வரை இரத்து செய்யப்பட்டுள்ளனஎன மட்டக்களப்பு ரயில் நிலைய பிரதம அதிபர் தெரிவித்தார்.

தினமும் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு மூன்று ரயில் சேவைகளும்மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்குமூன்றுரயில் சேவைகளும் மட்டக்களப்பிலிருந்து மாகோவிற்கு இரு சேவைகளும் இடம்பெற்று வந்தன.

தற்போதைய சூழ்நிலைகளால் அனைத்து சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு ரயில் நிலையம் தற்போது பயணிகளின் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

## புத்தளம் – கொழும்பு முகத்திடல் மூடப்பட்டது!

புத்தளம் நகரிலுள்ள கொழும்பு முகத்திடல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக புத்தளம் நகர பிதா கே.ஏ.பாயிஸ் தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா தொற்றின் இரண்டாம் கட்ட பரவல் மிகவும் தீவிரமடைந்துள்ள நிலையில், புத்தளம் நகரிலுள்ள பொதுமக்கள் மாத்திரமின்றி, வெளியூர் மக்களும் ஒன்று கூடும் ஒரு தளமாக காணப்படும் கொழும்பு முகத்திடலை தற்காலிகமாக மூடுவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், புத்தளம் பாத்திமா கல்லூரி வீதியில் நீண்ட காலமாக இடம்பெற்றுவந்த வாராந்த சந்தையும் வியாபாரிகளுக்கிடையிலான தூரம், பொதுமக்களின் இட நெரிசல் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு தற்காலிகமாக புத்தளம் பொலிஸ் வீதிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, அவசியத் தேவையின்றி மக்கள் வெளியே செல்வதையும், சிறுவர்கள், முதியவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோரை அழைத்துக் கொண்டு வெளியே சுற்றித்திரிவதையும் தவிர்த்துக்கொள்ளுமாறும் புத்தளம் நகர பிதா கே.ஏ.பாயிஸ் மேலும் குறிப்பிட்டார்.

## போதைப் பொருள் குற்றச்சாட்டில் 99 பேர் கைது!

கடந்த 24 மணி நேரத்தில் மேல் மாகாணத்தில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைளின்போது போதைப்பொருள் மற்றும் மதுபானங்கள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் 99 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட 21 பேரும், கஞ்சா மற்றும் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட 59 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் 35 கிராம் ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கூட்டமைப்புக் குழப்பம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளராக மாவை சேனாதிராசாவை திடுதிப்பென அறிவித்த ஏற்பாடு கூட்டமைப்புக்குள்ளும் வெளியிலும் பலத்த அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் கூடத் தெரியாமல் திடீரென ஒரு முடிவை அப்படி எடுத்தமையும் –

அத்தகைய முடிவை சம்பந்தன் எதிர்க்க மாட்டார், எதிர்க்கக் கூடாது என்ற சாரப்பட கருத்துகள் அநாயசமாக வெளியிடப்படுகின்றமையும் –

கட்சிக்குள் ஐக்கியத்தை வளர்க்க உதவப் போவதில்லை என்பது நிச்சயம்.

ஒரு தலைப்பட்சமாக இத்தகைய முடிவுகளை குழப்ப சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எடுப்பது –

பல்வேறு தமிழ்க் கட்சிகள், தரப்புகளை ஒன்றிணைப்பதற்குத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா இப்போது எடுத்திருக்கும் முயற்சிகளின் அடிப்படையில் பார்த்தால் –

இது விடயத்தில் ‘பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதை’ போன்றே அது முடியும் என்பது திண்ணம்.

முதலில் என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை விலாவாரியாகப் பார்ப்பது நல்லது.

தேர்தல் திணைக்களத்தின் பதிவு இரண்டு விதமாக அமையலாம்.

ஒன்று – கட்சிகளைப் பதிவு செய்வது.

அடுத்தது – பதிவு செய்யப்பட்ட பல கட்சிகளும் தரப்புகளும் தங்களுக்குள் ஒரு கூட்டமைத்துச் செயற்படும் போது அந்தக் கூட்டைப் பற்றிய தகவலைப் பதிவது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு தனிக்கட்சியாகப் பதிவு செய்வதற்கு இதுவரையில் எந்த விதமான காத்திரமான முடிவுகளும் எடுக்கப்படவுமில்லை. செயற்படுத்தப்படவுமில்லை.

ஆனால், இரண்டாவது வகையில், பல்வேறு பதிவு செய்யப்பட்ட கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு கூட்டமைப்பாக இயங்குவதற்கு முன்னேற்பாடாக அதனைப் பதிவு செய்வதற்கான முன் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அது சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னைய முயற்சிகள்.

அந்த முயற்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் புளொட் இருக்கவில்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சி, சுரேஷ் பிறேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ரெலோ ஆகியனவே இருந்தன.

மேற்படி மூன்று கட்சிகளும் சேர்ந்து ‘தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு’ என்ற பெயரில் இயங்கவிருக்கின்றன என்ற தகவல் அடங்கிய ஒரு விண்ணப்பமே அப்போது தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் அப்போதைய செயலர் மாவை சேனாதிராசா, ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் அதன் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், ரெலோவின் சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரின் பெயர்கள் வழங்கப்பட்டன. இந்த அமைப்புத் தொடர்பில் தேர்தல் ஆணையத்தின் தொடர்பு முகவராக மாவை சேனாதிராசாவின் பெயரும் விலாசமும் கூட அப்போது வழங்கப்பட்டன.

இரண்டு நோக்கங்களுக்காக இந்த விண்ணப்பம் அப்போது சமர்ப்பிக்கப்பட்டதாகப் பேசப்பட்டது.

ஒன்று – ‘தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு’ என்ற பெயரில் புதிய கூட்டமைப்பையோ, கட்சியையோ வேறு யாரும் பதிவு செய்ய முயற்சி எடுக்காமல், அந்தப் பெயரை தடுப்புப் பண்ணுவதற்கான ஒரு முன்னெச்சரிக்கை ஏற்பாடு.

அடுத்தது – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று பங்காளிக் கட்சித் தலைவர்களில் இருந்து (சுரேஷ் பிறேமச்சந்திரன், செல்வம் உட்பட) பலரும் கடும் விமர்சனம் தெரிவித்து வருகையில் அதைச் சமாளித்து பதிவுக்கான முன்முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகக் காட்டுவதும் இதற்குள் பொதிருந்த சூத்திரம்தான்.

ஆனால், இப்படி ஒரு கூட்டு அல்ல, அதையும் தாண்டி கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாகவே பதிவு செய்ய வேண்டும் என அப்போதிருந்தே பங்காளிக் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. அப்படி ஒரு கூட்டை பதிவு செய்யப்பட்ட ஓர் அரசியல் கட்சியாக்குவதாயின் அதற்குப் பல தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். அந்தப் புதிய கட்சிக்குள் அங்கம் பெறக் கூடிய கட்சிகள் ஒவ்வொன்றும் (அன்றைய நிலையில் தமிழரசு, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகியவை ஒவ்வொன்றும்) தமது மத்திய குழுவைக் கூட்டி இந்தச் கூட்டில் தாங்கள் சேர்ந்து இயங்கப் போவது பற்றிய தீர்மானம் ஒன்றை எடுத்து, அந்தத் தீர்மானத்தின் பிரதியை தேர்தல் ஆணையத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும். இது உட்பட கட்சியாகப் பதிவு செய்வதற்கான பல நடவடிக்கைகள் செய்யப்படாமல் மீதமிருக்கின்றன.

தேர்தலில் போட்டியிடும் பதிவு தமிழரசுக் கட்சியின் பெயரில் மட்டுமே வைத்திருக்க விரும்பிய மாவை உட்பட ஏனையத் தமிழரசுத் தலைவர்கள் அதனால் இப்படிக் கூட்டமைப்பைப் பதிவு செய்யும் முயற்சியை பிள்ளையார் சுழியுடன் திட்டமிட்டே நிறுத்திக் கொண்டார்கள்.

அதற்கு மேல், இது தொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கையுமே எடுக்கப்படவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ். வெளியேறியதும், புளொட் உள்நுழைந்ததும் கூட தேர்தல் ஆணையத்துக்கு இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்றே தெரிகின்றது.

தமிழ்க் கூட்டமைப்பை, ஓர் அரசியல் கட்சியாகப் பதிவதற்கான எந்த நடவடிக்கையுமே முன்னெடுக்கப்படாமல் கிடப்பில் கிடக்க, தேவையில்லாமல் பொதுச் செயலாளர் நியமிக்கப்பட வேண்டும் என்ற விவகாரத்தைத் தூக்கிப் பிடித்துக் கிளறி, விவாதித்து, திடுதிப்பென ஒரு தலைப்பட்சமாக செயலாளர் நியமிக்கப்பட்டார் என அறிவித்து, ஒரு சர்சையை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? தமிழ்க் கூட்டமைப்பைத் தனி அரசியல் கட்சியாக பதியுங்கள் என்ற கோரிக்கையை மீண்டும் கிளப்பி, அதனால் கூட்டமைப்புக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி விடும் வேலையா இது?

ஒன்றுமே புரியவில்லை. எல்லாம் குழப்பம்தான்.!

## கொடிய கொரோனாவே, ஓடிப்போ! நீர் மந்திரித்து ஆறுகளில் கலப்பு!

### அமைச்சர்கள் மேற்கொண்டனர்



கட்டுக்கடங்காமல் பரவும் கொரோனாவை கட்டுப்படுத்த இன்று மத வழிபாடுகளில் ஈடுபடுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று பௌத்த விகாரைகள் மற்றும் இந்து ஆலயங்களில் வழிபாடு நடத்துமாறு கேட்டுள்ளார்.

இதற்குள், நேற்று நாட்டின் முக்கிய கங்கைகளில் மந்திரிக்கப்பட்ட தண்ணீரை அமைச்சர்கள் கலந்து வழிபாட்டில் ஈடுபட்டனர்.

பிரதமரின் மருத்துவர் என கூறும் எலியந்த வைட் வழங்கிய மந்திரிக்கப்பட்ட தண்ணீர் பானைகளை அமைச்சர்கள் பவித்ரா வன்னியாராச்சி களு கங்கையிலும், பிரசன்ன ரணதுங்க, உதய கம்மன்பில ஆகியோர் களனி கங்கையின் வெவ்வேறு இடங்களிலும் தண்ணீரை கலந்தனர்.

இதேபோல நாட்டின் பல பகுதிகளிலுள்ள கங்கைகளில் மந்திரிக்கப்பட்ட தண்ணீரை கலக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எலியந்த வைட் உலகளவில் பிரபலமான வைத்தியர் ஆவார். சச்சின் டெண்டுல்கர், முத்தையா முரளிதரன் ஆகியோர் அவரிடம் சிகிச்சை பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீலங்கா இனஸ்ரன்ஸ் ஊழியருக்குக் கொரோனா யூனியன் பிளேஸ் கிளை அலுவலகத்துக்கு பூட்டு!

கொழும்பு, நவ.03

ஸ்ரீலங்கா இன்சூரன்ஸின் யூனியன் பிளேஸ் அலுவலகத்தை சேர்ந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனம் இதனை அறிவித்துள்ளது. மேலும், அவருடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மறு அறிவித்தல் வரை அந்த அலுவலகம் மூடப்பட்டிருக்கும் என ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. இதேவேளை, பொரளை பொலிஸ் நிலையத்தில் மேலும் 8 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 10 பேரில் 8 பேருக்கு இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## இரண்டு மணி நேரங்கள் மட்டுமே இன்று நாடாளுமன்றமன்று கூடும்!

நாடாளுமன்றம் நாளை இரண்டு மணி நேரம் மட்டுமே கூடவுள்ள நிலையில், இதன்போது சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் இரண்டு புதிய விதிமுறைகளை முன்வைப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை மட்டுமே நாடாளுமன்றம் கூடும் என்றும் இதன்போது சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் இரண்டு விதிமுறைகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் நாடளுமன்றப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்ற அலுவல் பற்றிய குழு கூடவுள்ளது.

இதன்போது 2 மற்றும் 3 ஆவது வாசிப்பைத் தொடர்ந்து 2020 ஆம் நிதியாண்டுக்குரிய சேவை செலவினங்களுக்காக நிதி அமைச்சர் சமர்ப்பித்த நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணையை அடுத்த மாதம் 12 ஆம் திகதி நிறைவேற்றுவதாக சபாநாயகர் தீர்மானித்துள்ளார்.

அதேவேளை, நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் தினத்தன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள், அழைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தவிர வேறு எவரும் நாடாளுமன்றத்துக்குச் செல்ல அனுமதி கிடையாது. ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவர்களுக்கு இணையவழி கல்வி வழங்க நடவடிக்கை

கொழும்பு, நவ.03

முன்னர் திட்டமிட்டபடி நவம்பர் 9 ஆம் திகதி மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைக்காக பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பாக இறுதி முடிவு இந்த வார இறுதியில் எட்டப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர், பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பான முடிவை எட்டுவதற்கு முன்னர் அது தொடர்பாக ஆழமாக சிந்தித்து செய்யப்பட வேண்டும் என கூறினார்.

அத்தோடு பாடசாலை மாணவர்களின் சுகாதார பாதுகாப்பு மிக முக்கியமானது என்றும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்



குறிப்பிட்டார்.

மாணவர்கள் கல்வியைப் பெறுவதை உறுதி செய்ய, தேவை ஏற்படின் மாணவர்களுக்கு இணைய வழி கல்வியை வழங்கவும் தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2020
‘எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ,
அவர் தன்னை விட மற்றவர்களை அதிகம்
நேசிப்பவராவார்.’ —தோமஸ்ஃ புல்லர் (இங்கிலாந்து வரலாற்றாளர்)

# மக்கள் வழங்கிய ஆணையை மீறி அரசு ஒருபோதும் செயற்படக்கூடாது!



## என்கிறார் சஜித் பிரேமதாஸ

ஜனாதிபதி மற்றும் அரசும் பொதுத்தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையை மீறி செயற்படக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக் கொண்டுள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று (திங்கட்கிழமை) செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார். சஜித் பிரேமதாஸ மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கொரோனா ஒழிப்பு செயற்பாட்டுக்கு இணையாக, கொரேனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனினும், கடந்த காலங்களில் இந்த இரண்டு செயற்பாடுகள் சரிசமமாக இடம்பெற்றமையை நாம் அவதானிக்கவில்லை. இதனால், மக்களே இன்று, தங்களுக்கு உதவுமாறு அரசாங்கத்திடம் கேட்க ஆரம்பித்துள்ளார்கள்.

எனினும், அரசாங்கம் இதுவரை மக்களுக்கான நிவாரணத்தை வழங்கவில்லை. இந்த ஆட்சியை மக்கள் அமைத்தார்கள்.

மக்களின் துயரங்களை முதலில் உணர்ந்துக் கொள்ளவேண்டும். அப்படியானால் மட்டுமே மக்களுக்கான ஆட்சியை அமைக்க முடியும்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் என இரண்டு தேர்தல்களில் மக்கள் இந்த அரசாங்கத்துக்கு பெரும்பான்மையான ஆதரவை வழங்கியுள்ளார்கள்.

எனவே, அரசாங்கம் இந்த ஆணைக்கு இணங்கிச் செயற்பட வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கையாகும்.

இதிலிருந்து பின்வாங்கக் கூடாது. கொரோனாவைக் கட்டுப்படுத்த அரசாங்கம் விசேட பூஜைகளை செய்து வருகிறது.

இதில் நான் குறை கூறப்போகின்றவனல்லன். எனினும், இதற்கு முன்னர் பி.சீ.ஆர். இயந்திரங்களை அரசாங்கம் கொள்வனவு செய்திருக்கலாம். வென்டிலேட்டர்களை கொள்வனவு செய்திருக்கலாம். படுக்கைகளை வாங்கியிருக்கலாம். இதனை மேற்கொண்டிருந்தால் கொரோனா தொற்றைக் கட்டப்படுத்தியிருக்கலாம்.– என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பதுளை டிப்போ இ.போ.ச. ஊழியர் 8 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்!

பதுளை இ.போ.ச. பஸ் டிப்போவின் 8 ஊழியர்கள் சுய தனிமைப்படுத்தப்பட் டுள்ளனர் என அந்த மாவட்ட மாநகர சபையின் பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பதுளை மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ள கொழும்பைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி யொருவருடன் தொடர்பிலிருந்தவர்களே இவ்வாறு சுய தனிமைப்படுத் தப்பட்டுள்ளனர்.

கொழும்பில் பி.சீ.ஆர். பரிசோதனை செய்துகொண்ட பொலிஸ் அதிகாரியொருவர், அதன் முடிவுகள் கிடைப்பதற்கு முன்னரே பசறையிலுள்ள டிப்போ ஊழியர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில், அவரது பி.சீ.ஆர். பரிசோதனை அறிக்கை வெளியானது. அதில் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்தே இ.போ.ச. பஸ் டிப்போவின் 8 ஊழியர்கள் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## சஹ்ரானுடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு!



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரி சஹ்ரான் ஹாசீமுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட 12 சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கு, கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிவான் றிஸ்வான் முன்னிலையில் காணொளி தொடர்பாடல் மூலம் இடம்பெற்ற நிலையில் சந்தேகநபர்களை வரும் நவம்பர் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த விசாரணையின்போது மேலதிக அறிக்கைகள் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர்ப் பகுதியொன்றில் வைத்து கடந்த வருடம் மேற்குறித்த 12 சந்தேகநபர்களும் கைதாகியிருந்தனர்.

கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவரான சஹ்ரான் ஹாசீம் தலைமையில் பல்வேறு இடங்களில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 26 அன்று அம்பாறை, சாய்ந்தமருது பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு தாக்குதல் சம்பவத்தின் பின்னர் குறித்த அமைப்புடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் நாட்டின் பல்வேறு பகுதியில் இருந்தும் பாதுகாப்புத் தரப்பினரால் கைதுசெய்யப்பட்டதுடன் பலர் விளக்கமறியலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊரடங்கை நீடிக்கும் தீர்மானத்துக்கு பொதுச்சுகாதார பரிசோதகர் வரவேற்பு!

மேல் மாகாணத்தில் ஊரடங்கை நீடிக்கும் தீர்மானத்தை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் வரவேற்றுள்ளது.

அதேநேரம், கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கமும் சுகாதார அதிகாரிகளும் விடுக்கும் உத்தரவுகள், அறிவுறுத்தல்களை பொதுமக்கள் பின்பற்றவேண்டும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண கேட்டுக்கொண்டுள்ளார்.

பொதுமக்கள் பெருமளவில் ஒன்று கூடுகின்றமையையும் வெளியில் நடமாடுகின்றமையையும் தவிர்க்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பொதுமக்கள் கொரோனா வைரஸ் விதிமுறைகளைத் தொடர்ந்தும் மீறுவார்களானால் அதனால் ஆரோக்கியமான நிலையில் உள்ள மக்களும் பாதிக்கப்படும் நிலைமை உருவாகும் எனவும் இது நாட்டின் சுகாதாரத் துறைக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் எனவும் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

## அரசாங்கத்தின் கொரோனா செயற்பாடுகளுக்கு அனைத்து கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும்!

### கரு ஜயசூரிய கோரிக்கை



கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரவளிக்கவேண்டும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய கோரியுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கரு ஜெயசூரிய மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

நாட்டு மக்களினது பாதுகாப்பை உறுதி செய்யவேண்டியது அனைவரதும் பொறுப்பாகும்.

மேலும், 20 ஆவது திருத்தத்தின் ஊடாக இலங்கை மிகவும் வலுவான நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியைக் கொண்டுள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதி, கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்த வேண்டும்.

மக்களால் அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை, வைரஸ் ஒழிப்பு நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தவேண்டும்.

இதேவேளை, அனைத்து அரசியல் கட்சிகளும் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்க வேண்டும்.– என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வெளிநாட்டிலுள்ளோரின் காணிகளை சுவீகரிப்போருக்கு எதிராக விசாரணை!

### சட்டமா அதிபர் உத்தரவு



வெளிநாடுகளில் வசிப்போரின் காணிகளை சுவீகரிக்கும் அரசியல் பின்புலமுள்ள குழு தொடர்பாக விசாரணை நடத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபருக்கு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என சட்டமா அதிபரின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

சி.சி.ரி.வி. காட்சிகளின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அம்பாந்தோட்டை நகர மேயர் உட்பட நான்கு பேர் இந்தச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என்பது தெரிய வந்துள்ள நிலையில், இந்த விவகாரத்தை குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார் என சட்டமா அதிபரின் இணைப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த குழு தொடர்பான விவரங்கள் அண்மையில் சமூகவலைத் தளங்களில் காணொலி ஆதாரத்துடன் வெளியாகி இருந்தன எனவும் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை – இந்திய ஒப்பந்தம்: அங்கம் 01

## ஒரு வரலாற்றின் திசை நோக்கு

அரசியலுக்கு வந்த பின்னர் முதலமைச்சராக பதவியேற்று, தற்போது யாழ். மாவட்டத்திலிருந்து இலங்கை நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியிருக்கும் திரு. சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள், முதலமைச்சராகவிருந்து தான் பெற்ற அனுபவங்களினால், அண்மையில் வெளியிட்டிருக்கும் இலங்கை – இந்திய ஒப்பந்தம் தொடர்பான கருத்துக்



சி.வி.விக்னேஸ்வரன்

சிரேஷ்ட சட்டத்தரணி செ. ரவீந்திரன்
(தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் - T.R.R.O)
ஆஸ்திரேலியா

கள் கவனிப்பிற்குரியவை.

13 ஆவது ரத்து என்பது எமது இனப்பிரச்சினைக்கு தீர்வாகாது என்பதும், அதில் எந்தவிதமான மனப்பூர்வமான பங்கும் அடுத்தடுத்து பதவிக்கு வந்த சிங்கள அரசாங்கங்களுக்கு இல்லை என்பதும், ஒப்புக்காக – நிர்ப்பந்தத்துக்கு அமையவே – அதனைக் கொண்டு வந்தார்கள் என்பதும் நன்கறியப்பட்டவை. அதை நடைமுறைப்படுத்துவதற்கு சிங்கள பேரினவாதம் தந்த இடரும் தெரிந்ததே.

அதனால்தான் திருவாளர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் உட்பட மேலும் பலரும் நீதி



கட்டுரையாளர்

யரசர் தற்போது கூறும் கடிதங்களை அன்றே அனுப்பியிருந்தார்கள்.

*'இலங்கை – இந்திய ஒப்பந்தம் வேறு, 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் வேறு என்பது இங்கு புரிந்து கொள்ளப்பட வேண்டும்.'* என விக்னேஸ்வரன் சொல்வது முக்கியமாக நோக்கப்படல் வேண்டும்.

ஆம். ஒப்பந்தம் வேறு, 13 ஆவது திருத்தம் வேறு.

13 ஆவது திருத்தம் ஒப்பந்தத்தின் அடிப்படையில் வந்தாலும், எதிர்பார்த்த மாகாண அலகுகளிலோ அவற்றின் அதிகாரங்களிலோ, அதிகார பகிர்வு சிங்களவரும் தமிழர்களும் சேர்ந்து தங்கள் தங்கள் அதிகாரங்களை, ஓர் இணைந்த மத்திய அரசின் ஊடாகப் பகிரவில்லை. மாறாக ஒற்றையாட்சியில் சில கிள்ளிக் கொடுப்பனவே நடந்தது.

ஆனால், ஒப்பந்தமோ பிற அம்சங்களோடு தமிழர் நலன் சார்ந்து அவர்களது உரிமைகளையும் உள்ளடக்கியே ஆக்கப்பட்டது. இந்தியாவின் பிராந்திய நலன் முக்கியம் பெற்றாலும், நடைமுறையில் சிங்கள மக்களின் பார்வையில் அது தமிழருக்கு ஆதரவான, தமது நாட்டின் இறைமையின் ஆக்கிரமிப்பாகவே பார்க்கப்பட்டது.

இந்தியப் படைகள் வந்ததும், ஸ்ரீலங்கா படைகள் முடக்கப்பட்டதும், திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் அத்துமீறிக் குடியேறியவர்கள் மற்றும் குடியேற்றப்பட்டவர்கள் அனைவரும் தாமாகவே அல்லோலகல்லோலப்பட்டு கிடைத்த வாகனங்களில் எடுக்கக்கூடிய உடைமைகளுடன் வெளியேறியமையும் நிகழ்ந்தன.

ஆனால், ஒப்பந்தத்தையும் இந்தியாவின் அனுசரணையையும் வைத்து எமது அரசியல் நகர்வுகளை முன்னெடுக்கத் தவறியமைக்கு தமிழரும் அன்றிருந்த தலைவர்களும் ஒட்டுமொத்தமாகப் பொறுப்பேற்க வேண்டும். குறிப்பிட்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நடந்த வரலாறுகளை முன்னெடுத்தவர்கள் மட்டுமலற்ற, அதனைப் பார்த்துக் கொண்டு ஏதும் செய்யாமல் தம்பாட்டில் சிவனே என்று இருந்தோர் யாபேரும் கடந்த 33 வருடங்களில் அதற்கு பங்குதாரர்களாகிறார்கள்.

காலத்துக்குக் காலம் ஏதோ காரணங்கள் சொல்லி எம்மை நாமே திருப்திப்படுத்திக் கொண்டு வாழ்ந்து, அஸ்தமனத்திலிருந்து ஏதோ ஒரு விடியலை இப்பொழுது அந்த ஒப்பந்தத்தின் ஊடாக பாரக்கின்றோம். அதைப் பற்றி எல்லோரும் பேசுகிறோம்.

என்றாலும், நீதியரசர் கூறும் சில கருத்துக்களை வரலாற்று ரீதியாக பார்க்க வேண்டும். ஆனாலும், அவரது தொனி இந்தியா தனது பிராந்திய நலன்களுக்காக இனப் பிரச்சினையை பாவித்து ஒரு தலைப்பட்சமாக ஒரு ஒப்பந்தத்தை திணித்து விட்டு, தமிழரைக் கணக்கிலெடுக்காது இருந்து விட்டது போலாகிறது.

அன்று சம்பந்தர் சொன்னதை திரும்பிப்பார்க்க வேண்டும்:–

*'இந்தப் பூலோகம் நீதியின் அச்சாணியில் சுழல்வதில்லை. அடக்கப்பட்ட தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் எல்லாம் நியாயத் தராசில் வைத்து நிறுக்கப்படுவதுமில்லை. மனித உரிமைகளைப் பற்றி பறைசாற்றுகின்ற உலகப் பெரும் சக்திகள் எல்லோரும் நீதி தேவர்களும் அல்லர். அனைத்துலக வல்லரசுகளும் அவற்றை சார்ந்து இயங்கிய சக்தி மிக்க உலக நிறுவனங்களும் ஏதோ தமது நலன்களையெல்லாம் பணயம் வைத்துவிட்டு, எமக்காக இரங்கி வந்து, எமது உரிமைகளை பெற்றுத் தரப் போகின்றன என்றும், நாங்கள் நம்பவில்லை. ஆதலால் தமது தேசிய நலன்களை அடிப்படையாக வைத்து அவர்கள் நடத்தும் சதுரங்க ஆட்டத்தின் ஏதோ ஒரு பகுதியாக அவர்களது மனிதாபிமான உள்ளுணர்விற்கும் தேசநலன்சார்ந்த முனைப்பிற்கும் இடையிலிருக்கும் ஒரு புள்ளியில் இருந்து எமது நலன்களும் பாதுகாக்கப்படலாம். அதற்கு உகந்த சூழலைக் குழப்பாமல் நாம்தான் பேண வேண்டும். அனைத்துலக சமூகத்தை அசௌகரியப்படுத்தாமல் நிலைமைகளை நாங்கள் பக்குவமாக கையாள வேண்டும்.'* – என்றார் சம்பந்தன்.

அதுவும் ஏதோ சடுதியாக, 1987 இல்வடமராட்சி தாக்குதலையடுத்து உணவுப் பொதிகளை போட்டு விட்டு, தமிழ்த் தரப்புகளை டில்லிக்கு இழுத்து,! வேண்டுமா..? வேண்டாமா..? இணங்கியே ஆக வேண்டும்!' என்று ஒப்பந்தத்தை செய்தது போன்ற எண்ணங்களே பலர் மனதில் இருக்கின்றன.

**தமிழ் விடுதலை இயக்கங்களின் உட்பூசல்களால் இந்திராகாந்தி வருந்தி மனம் சலித்து அமிர்தலிங்கத்துடன் அடிக்கடி ஆதங்கப்பட்டிருந்தார்.**

அதனால் சில தெளிவுகள் தேவையாகிறது. கனிந்து வரும் இன்னொரு காலத்தை நடந்த சம்பவங்கள், திரும்பவும் அதே பாதைக்குள் தள்ளாமல் பார்ப்பது எங்கள் கடமையும் தார்மீகப் பொறுப்புமாகும்.

ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரை இந்தியா தமிழரின் அபிலாஷைகளை அறிந்திருந்ததா..?

நான் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தின் பணியாளனாக ஈடுபட்டமையிலிருந்து அதற்கு வைக்கப்பட்ட பல முட்டுக்கட்டைகள் பற்றி சிறிது விவரமாகவும் நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்கள் பொதுவிலும், அதனைத் தொடர்ந்து 2009 போர் முடிவுக்குப் பின்னர் அதனை அமுல்படுத்த நடைபெற்ற பிரயத்தனங்களையும் குறிப்பிட விழைகிறேன்.

அது இன்றைய கழுத்தறுப்பு ராஜதந்திர நகர்வுகளில், நமது கழுத்து அறுக்கப்பட்டு மற்றைய சர்வதேச சக்திகள் தமது நலன்களை நிறைவேற்றிக் கொள்ள



அமரர்.கே.கந்தசாமி

வழமை போல நமது ஒற்றுமையின் மையும் தீர்க்கதரிசனமல்லாமையும் நம்பிக்கைகளை வளர்த்து காரியங்களை சாதிக்கின்ற ஆளுமைகளை இழந்து விடக்கூடாது என்ற எண்ணமே.

*'தமிழ் மக்களது அபிலாஷைகளை இந்திய ஆட்சியாளர்கள் அறிந்திருக்கவில்லை. ராஜீவ்காந்தி, ஒரு சிலரால் தவறாக நடத்தப்பட்டார். அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனா, ராஜீவ் காந்தியைத் தனது சாணக்கியத்தினால் விடுதலைப் புலிகளுக்கு எதிராக திருப்புவதில் வெற்றி கண்டமையும் காரணங்கள். ஆனால், இலங்கை – இந்திய ஒப்பந்த விடயத்தில் இந்தியா செய்த தவறு இனப் பிரச்சினையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை ஒரு தரப்பாக கருதி செயற்படாமை ஆகும்.'*

இது, நீதியரசரின் தற்போதைய அரசியலுக்கு நியாயமாகப்படலாம்.

இன வேற்றுமை தொடங்கிய 1950 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து எங்களது பல தலைவர்கள் மாறி மாறி தமிழ்நாடு மற்றும் மத்திய அரசின் தலைவர்களை சந்தித்து, தமிழர் நிலையில் இலங்கையின் நோக்கத்தை வெளிப்படுத்தினார்கள். கடந்த30 வருடங்களுக்கும் மேலான காலத்தில் எங்கள் தலைவர்களின் முறைப்பாடுகளுக்கும் மனுக்களுக்கும் பதிலாக ஒப்புக்கு ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று பொதுவான புத்திமதிகளோடு இந்திய மாநில அரசுகள் நின்று விட்டன.

1983 ஆம் ஆண்டு வரை தந்தை செல்வநாயகம், வன்னிய சிங்கம், அமிர்தலிங்கம், நாகநாதன், கதிரவேற்பிள்ளை போன்றோர் தொடர்ச்சியாக எடுத்த முயற்சிகள் எல்லாமே கரிசனையில்தான் முடிந்தன. ஆனால், ஒரு தீர்க்கமான முடிவுக்கு – தமிழ் மக்களை உள்ளடக்கிய நடவடிக்கை இருக்கவில்லை.

1983 ஆம் ஆண்டு கலவரத்தின் பின்னனர்(1977 ஆம் ஆண்டு விளைவுகளைத் தொடர்ந்து ) அமிர்தலிங்கம் உட்பட முக்கிய தலைவர்களெல்லாம் தமிழ் நாட்டில் தஞ்சம்பெற, இலங்கையின் வெளிநாட்டு



ஆர். சம்பந்தன்

கொள்கைகள் இந்தியாவுக்கு அங்கலாய்ப்பு கொடுக்க அதனது நோக்குமாறியது.

இந்திராகாந்தி நேரடியாகவே அமிர்தலிங்கத்துடனும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும் தொடர்புகளைப் பேணி காய்களை நகர்த்தினார். வெளியுறவுத் தொடர்பாளராக இருந்த ஜி.பார்த்தசாரதி மூலமாகப் பல பேச்சுவார்த்தைகள் நடந்தன. அதன் பயனாக ஒன்று, இரண்டு, மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளை, சர்வ கட்சி கூட்டங்கள் என்று ஜே.ஆர் இழுத்தடித்தார். அவற்றிற்கு அமிர்தலிங்கத்தையும் சில கூட்டணி பிரமுகர்களையும் அனுப்பி வைத்தார்.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர்:

# மாவைக்குரிய பதவி நியமனத்தை ஆட்சேபிக்கவேமாட்டார் சம்பந்தன்!

### சி.வீ.கே.சிவஞானம் நம்பிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ.03

சட்டத் தேவையின் நிமித்தமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் நியமிக்கப்பட்டிருக்கின்றார் எனவும், பங்காளிக் கட்சிகளின் ஏகமனதான தீர்மானத்தின் பிரகாரமே பொதுச்செயலாளராக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார் எனவும் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இந்த நியமனத்தைக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயா ஆட்சேபிக்க மாட்டார் எனவும், அவர் ஆட்சேபிக்க வேண்டிய தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டிலுள்ள தனது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஊடக சந்திப்பை சி.வீ.கே. சிவஞானம் நடத்தியிருந்தார். அதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் நியமனம் குறித்தும், அதற்குக் கட்சித் தலைவர் சம்பந்தனின் நிலைப்பாடு தொடர்பிலும் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலையே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்தாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் என்பது ஒரு சட்டம் சம்பந்தப்பட்ட விடயம். அந்தச் செயலாளர் என்பது சட்ட தேவை. அதனை யாரும் ஆட்சேபிக்க முடியாது. அப்படிப் பார்த்தால் இதுவரையில் செய்து வந்ததே தவறு. 2009ஆம் ஆண்டில் இருந்து இந்தச் சட்டம் அமுலில் இருக்கின்றது. இதில் சம்பந்தன் ஐயா ஆட்சேபிக்கமாட்டார். ஏனெனில் இது சட்ட தேவை.

ஆனபடியால் பொதுச்செயலாளராக தற்போது மாவை சேனாதிராசா நியமிக்கப்பட்டிருக்கின்றார். அதே போன்று ஒரு கூட்டமைப்பில் எத்தனை கட்சிகள் இருந்தாலும் அதில் ஒருவர் நியமிக்கப்படலாம். அதற்கமைய கூட்டமைப்பில் தற்போது மூன்று கட்சிகள் இருக்கின்ற நிலைமையில் தமிழரசின் தலைவர் மாவை சேனாதிராசா தற்போது கூட்டமைப்பின் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

குறிப்பாக இந்தக் கூட்டமைப்பில் பல கட்சிகள் இருக்கின்றபோதும் அதில் பொதுச்செயலாளர் யார் என்ற பிரச்சினைகள், கேள்விகள் எதுவும் இல்லாமலே பங்காளிக் கட்சிகளின் இணக்கப்பாட்டோடு ஏகமனதாக தமிழரசுத் தலைவரே தற்போது நியமிக்கப்பட்டிருக்கின்றார். அதற்கு யாரும் ஆட்சேபனை என்று இல்லை.

இது ஒரு சட்ட ஏற்பாடு. அதாவது சட்ட பூர்வமான கடமையை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு நியமனம். குறிப்பாக இந்த விடயம் புதிதானபடியால் சிலருக்குத் தெளிவற்ற தன்மை இருந்தது. ஆனால், ஒருமனதாக மாவை சேனாதிராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆகவே, நான் உடனடியாகவே சட்ட நிழல் பிரதி எடுத்து அதன் அடிப்படையில் எல்லோரும் புரிந்துகொண்டு ஒருமனதாகவே அந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டது.

கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் 2001ஆம் ஆண்டு பிற்பகுதியில் இருந்த செயற்பட்டு வருகிறது. ஆனால், 2009ஆம் ஆண்டு இயற்றப்பட்ட 58 ஆம் இலக்க நாடாளுமன்ற தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின்படி அதில் 8 ஏ என்ற பிரிவு உள்ளடக்கப்பட்டிருக்கிறது. அதன்படி ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு கூட்டமைப்பாகச் செயற்படுகிறதென்றால் அந்தக் கூட்டமைப்பிலே இணைந்து கொண்டிருக்கின்ற கட்சிகளினுடைய பெயர்கள் மற்றும் பதவி வகிப்பவர்களினுடைய விவரங்களை அந்தக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளரே தேர்தல் ஆணையகத்துக்கு அறிவிக்க வேண்டும் என்று இந்தச் சட்டம் சொல்கின்றது.

கடந்த 2009ஆம் ஆண்டிலேதான் இது அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு சட்டம். இவ்வாறான ஏற்பாடுகள் இருக்கின்றன என்பதை நான் மாவை சேனாதிராசாவுக்குச் சொல்லி வந்திருக்கின்றேன். அதன்படிதான் மூன்று கட்சித் தலைவர்களும் இருந்த சந்தர்ப்பத்தில் அந்த விடயம் எடுக்கப்பட்டது. இந்த விடயம் பரிசீலிக்கப்பட்டு முறைப்படியான ஒரு பொதுச்செயலாளர் நியமிக்கப்பட வேண்டி இருந்த சட்டத் தேவையின் காரணத்தால் ஏகமனதாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளராக நியமிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இது சட்டத் தேவைக்கான ஒரு நடவடிக்கை. இதைப் பெரிய பாரதூரமான விடயமாக நான் பார்க்கவில்லை. சட்டப்படி அந்தக் கடமைகளைச் செய்வதற்காகப் பொதுச்செயலாளர் சட்டப்படியான தேவை. அதற்கமைய அதனைப் பூர்த்தி செய்வதற்காகப் பொதுச்செயலாளர் நேற்று தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகள் மற்றும் அந்தச் சபைகளின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டங்களை அங்கீகரிப்பதற்காகத்தான் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது. தமிழரசு, புளொட், ரெலோ சார்பில் அதன் கட்சி தலைவர்களும் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர். இவ்வாறு அனைவரும் கலந்து கொண்டிருந்த நிலையிலையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. - என்றார்.

---

## மன்னார் மாவட்டத்தில் இதுவரை 12 பேருக்கு கொரோனா தொற்று!

### பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் தகவல்

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 1,083 பி.சீ.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் தற்போது வரை 12 பேர் கொரோனா தொற்று உள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று (திங்கட்கிழமை) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் கொரோனா தொற்றுள்ளவர்கள் 12 பேர் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் 10 பேர் பட்டித்தோட்டம் பகுதியில் கட்டட வேளை மேற்கொண்ட போது தொற்று உள்ளவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளனர்.

ஏனைய இரண்டு பேரும் பேலியகொடை கொரோனா கொத்தணியுடன் தொடர்பு உள்ளவர்கள். இவர்களில் 11 பேர் இரணவில சிகிச்சை நிலையத்துக்கும், ஒருவர் கந்தக்காடு சிகிச்சை நிலையத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் 9 பேர் தமது சிகிச்சைகளை நிறைவு செய்து தமது வீடுகளுக்குத் திரும்பி உள்ளனர். தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் 1,083 பி.சீ.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றில் பி.சீ.ஆர். 767 பரிசோதனைகள் யாழ் போதனா வைத்தியசாலையிலும், 316 பி.சீ.ஆர். பரிசோதனைகள் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பரிசோதனைகளின் போதே 12 பேரும் கொரோனா தொற்று உள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

தற்போது தொற்று உடையவர்களுடன் தொடர்பு உள்ளவர்கள் என்ற அடிப்படையிலும் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களில் இருந்து இங்கு வந்து தங்கி இருந்த நிலையில் 173 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மன்னார் புதுக்குடியிருப்பு பகுதியில் தொற்றுள்ள ஒருவருடன் தொடர்பாக இருந்த 33 பேருக்கு பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலும் கொழும்பில் தொற்று உள்ளவர் என அடையாளம் காணப்பட்ட நபருடன் மன்னார் வங்காலை பகுதியில் தொடர்பில் இருந்தவர்களுக்கும், முசலி பகுதியில் கொழும்பு மற்றும் மேல் மாகாணங்களில் இருந்து வந்து தங்கி இருந்தவர்களுக்கும் இன்று செவ்வாய்க்கிழமை பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளமையோடு மாந்தை மேற்கு மூன்றாம் பிட்டி பகுதியிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. - என அவர் மேலும் தெரிவித்தார்.

---

## தமது பொறுப்புக்களை மறந்து செயற்படுகின்றனர் பொதுமக்கள்!

### குற்றஞ்சாட்டுகிறார் ஜனாதிபதி



பொதுமக்கள் தமக்கான பொறுப்புணர்வுகளை மறந்து செயற்படுகின்றமையே நாட்டின் தற்போதைய நிலைமைக்குக் காரணம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கொரோனாத் தடுப்புத் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்களுடனான கலந்துரையாடலில் பேசிய ஜனாதிபதி, கொரோனா வைரஸின் பரவலுக்கு அரசாங்கம் மட்டும் காரணம் இல்லை எனக் கூறினார்.

பொதுமக்களுக்கும்ஒருபாரியபொறுப்பு உள்ளது என்றும், அந்த பொறுப்பில் அவர்கள் தோல்வியுற்றமையால் தான் இந்த நேரத்தில் கொரோனா வைரஸ் பரவுகிறது என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

மேல் மாகாணத்தில் வெள்ளிக்கிழமை ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்ட போது, பலர் கொழும்பிலிருந்து காலி, எல்ல போன்ற இடங்களுக்குச் சென்றனர் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இது மிகவும் பொறுப்பற்ற செயல் எனத் தெரிவித்த ஜனாதிபதி, பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பை அரசாங்கத்தால் மட்டுமே எடுக்க முடியாது என்றும் கூறினார்.

வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த அவர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அதிகாரிகள் பொதுமக்களுக்கு விளக்க வேண்டும் என்று ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

அத்தோடு கொரோனா வைரஸ் அறிகுறிகள் இருந்தால் எவரும் வைத்தியசாலைக்கு செல்லக்கூடாது என்றும் அதற்கு பதிலாக அவர்கள் சுகாதார அதிகாரிகளைத் தொடர்புகொண்டு வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

---

## தனிமைப்படுத்தல் முடித்த 228 பேர் வீடு திரும்பினர்!

கட்டாய தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை முடித்த 228 பேர் நேற்று தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து வெளியேறியுள்ளனர்.

முப்படையினரால் பராமரிக்கப்படும் ஐந்து தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களில் இருந்து இவர்கள் விடுவிக்கப்பட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இதுவரை 64 ஆயிரத்து 955 பேர் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை முடித்துள்ள அதேவேளை 4 ஆயிரத்து 39 பேர் தொடர்ந்து தனிமைப்படுத்தலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஊடகவியலாளர்களுக்கு எதிரான அநீதிகள்: விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு தேவை!

## சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்து

கொழும்பு,நவ.02

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி வழங்குவது ஒவ்வொரு அரசினதும் பொறுப்பாக இருந்தாலும், இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான எந்தவொரு குற்றத்துக்கும் நீதி வழங்கப்படாத வரலாறே காணப்படுகின்றது.- இவ்வாறு சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

நவம்பர் 2ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்ற ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விலக்கை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு சுதந்திர ஊடக இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது:-

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அதிக எண்ணிக்கையிலான குற்றங்கள் இடம்பெற்ற காலகட்டத்தில் ஆட்சியில் இருந்த அரசே தற்போதும் ஆட்சியில் இருக்கின்றது.

இந்தநிலையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்து நீதியான விசாரணைகள் இடம்பெறுமா என்ற கேள்வி நீதிக்காக குரல் எழுப்பும் ஊடகசமூகத்தினரிடையேஏற்பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க முழு அளவிலான ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் - என்றுள்ளது.

# வடக்கில் 2 நாள்கள் எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லை

## 59 நோயாளிகள் இதுவரை அடையாளம் என்கிறார் சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்

கொழும்பு, நவம்பர் 02

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று ஆரம்பித்த மார்ச் மாதத்தில் இருந்து இதுவரை வடக்கு மாகாணத்தில் 59 கொரோனா நோயாளிகள் இனங் காணப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் தற்போதைய நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்கு இன்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் மார்ச் முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் 18 நோயாளர்களும், ஒக்டோபர் மாதத்தில் 41 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய ஒக்டோபர் மாதத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 15 தொற்றா ளர்களும், வவுனியா மாவட்டத்தில் 14 தொற்றாளர்களும், மன்னார் மாவட்டத்தில் 10 தொற்றாளர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளார்கள்.

கடந்த இரண்டு நாள்களில் வடக்கு மாகாணத்தில் புதிதாக எவரும் தொற்றுக்கு உள்ளாகவில்லை.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுகின்ற பி.சி. ஆர். பரிசோதனைகளில் நேற்றுமுன்தினம் 378 பேரிடம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. நேற்று 385 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதிலே தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்த வெளிமாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கும், சிகிச்சை நிலையத்தில் இருந்த சிலருக்கும் மட்டுமே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. புதிதாக வடக்கு மாகாணத்தில் எவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை.

இருந்தாலும் கடந்த வாரத்தில் இனங்காணப்பட்ட நோயாளர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்தவர்களை இனங்கண்டு அவர்களைத் தனிமைப்படுத்தி அவர்களுக்கான பரிசோதனைகளையும் தற்போது மேற்கொண்டு வருகின்றோம்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரைக்கும் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பாசையூர் மேற்கு, திரு நகர் மற்றும் கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட இராஜகிராமம் ஆகிய 3 கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.



மருதங்கேணி கொரோனா சிகிச்சை நிலையம் கடந்த மாதம் 19ஆம் திகதி முதல் இயங்க ஆரம்பித்திருந்தது. 50 நோயாளிகள் சிகிச்சை பெற்று வந்திருந்தார்கள். இவர்களில் முதலாவது தொகுதியாக 16 பேர் இரண்டு வார கால சிகிச்சை நிறைவு செய்து இன்று தங்களுடைய வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள்.

அதேபோல் கிளிநொச்சியில் கிருஷ்ணபுரத்திலும், முல்லைத்தீவில் மாங்குளத்திலும் இந்த வாரத்தில் சிகிச்சை நிலையங்கள் இயங்க ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது இலங்கை முழுவதும் இந்தக் கொரோனாத் தொற்று மிகத் தீவிரமாகப் பரவி வருவதை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. தற்போது பரவி வருகின்ற இந்த வைரஸ் மிகவும் வீரியம் மிக்கது. அதன் தாக்கமும் அதிகமாகக் காணப்படுகின்றது.

எனவே, பொதுமக்கள் இந்தத் தொற்றுப் பரவலில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இரண்டு விடயங்களைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

இயலுமானவரை ஒன்றுகூடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அதற்காக கடந்த வாரம் யாழ். மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற செயலணி கூட்டத்தின்போது பொதுமக்களின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கான பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதாவது முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணுதல் மற்றும் கை கழுவுதல் போன்ற சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றினால் இந்தக் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும். - என்றார்.

# பொம்பியோ தங்கிய நட்சத்திர விடுதியின் 2 ஊழியருக்குத் தொற்று

கொழும்பு,நவ.02

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த வந்த அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ கொழும்பில் ஒரு நட்சத்திர விடுதி ஒன்றில் தங்கியிருந்தார்.

இவர் தங்கியிருந்த விடுதியில் பணியாற்றிய இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகி இருப்ப தாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயமானது ஒருவருக்கும் தெரியாத வகையில் மறைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

கொரோனா வைரஸை ஒழிப்பதற்காக மந்திரிக்கப்பட்ட பிரித் நீரை ஆற்றில் இட்டுவரும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அதனை நிறுத்திவிட்டு முதலில் அவர் பதவி விலக வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

# பொரளை பொலிஸில் 9 பேருக்குத் தொற்று

கொழும்பு,நவ.02

கொழும்பு, பொரளை பொலிஸ் நிலையத்தில் மேலும் ஒன்பது பொலிஸார் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நேற்று நடத்தப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளின் முடிவுகளின் அடிப்படையிலேயே இவர்கள் கொரோனா தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா நோயாளர்கள் களுத்துறையில் அமைந்துள்ள கொவிட்-19 சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என பொரளை பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் கூறினார்.

# 'கொரோனா' நோயாளி தற்கொலை!

## 22ஆவது மரணம் எனப் பதிவு; சுகாதார அதிகாரிகள் விளக்கம்

கொழும்பு,நவ.02

இலங்கையில் கொரோனா வைரஸ் மரணம் 22 ஆக உயர்வடைந்துள்ளது.

போதைப்பொருக்கு அடிமையான 27 வயதுடைய இளைஞர் ஒருவர், நோய் அறிகுறிகளுடன் கடந்த 31ஆம் திகதி பாணந்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தபோது வைத்தியசாலைக்குள்ளேயே தற்கொலை செய்து கொண்டிருந்தார்.

இவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது பிரேத பரிசோதனையின்போது உறுதி செய்யப்பட்ட நிலையில், இவரின் உயிரிழப்பை நாட்டில் கொரோனாவால் ஏற்பட்ட 22 ஆவது உயிரிழப்பாக சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. குறித்த இளைஞர் தற்கொலை காரணமாகவே உயிரிழந்துள்ள நிலையில், அதனை எப்படி கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட உயிரி ழப்பு எண்ணிக்கையுடன் சேர்க்க முடியும் என்று பல்வேறு தரப்பினர் கேள்விகளை எழுப்பி வருகின்றனர்.

இது தொடர்பாக தெளிவுப்படுத்தியுள்ள சுகாதார அதிகாரிகள் இலங்கையில் கொரோனா தொடர்பான மரணங்கள் இரண்டு வகைகளின் அடிப்படையில் பதிவு செய்யப்படுகின்றன என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

நேரடியான கொரோனா தொடர்பான மரணங்கள் மற்றும் மறைமுகமான கொரோனா தொடர்பான மரணங்கள் என இவை வகைப்படுத்தப்பட்டுள்ளன என்று தொற்று நோயியல் ஆய்வுப் பிரிவின் தலைமை வைத்திய நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். வைத்தியசாலையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர், சிகிச்சையளிக்கப்படும்போது உயிரிழந்தால் அது நேரடியான கொரோனா மரணத்துடன் தொடர்புடையது. மறைமுகமான கொரோனா வைரஸ் தொடர்பான மரணம் எனும்போது, விபத்து அல்லது தற்கொலை போன்ற பிற காரணங்களால் இறந்த ஒருவர், பிரேத பரிசோதனையின் போது நடத்தப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளைத் தொடர்ந்து வைரஸ் பாதிப்பு உறுதிப்படுத்தப்படுவதைக் குறிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தனிநபர்களின் தேவைக்காக நாட்டை முடக்க முடியாது!

## பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.03

சில தனிநபர்களின் தேவைகளுக்கு ஏற்றவகையில் நாட்டை முடக்குவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், இது நாட்டின் பொருளாதாரத்தை அழிக்க வழிவகுக்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

கொரோனாத் தொற்று தொடர்பாக எதிர்க்கட்சி அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருவதாகவும், ஒரு நாட்டில் அனைத்து நடவடிக்கைகளை முடக்குவது என்பது எளிதான காரியம் அல்ல என்றும் கூறினார்.

முற்றிலும் அவசியமானதாகக் கருதப்பட்டால், ஒரு முக்கியமான கட்டத்தில் மட்டுமே நாடு முழுமையாக முடக்கப்படும் என்றும் சாகர காரியவசம் குறிப்பிட்டார்.

அத்தோடு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை அபிவிருத்தி செய்து, முன்னோக்கி கொண்டு செல்வார் என்கின்ற நம்பிக்கையை மக்கள் கொண்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.



### யாழ்ப்பாணத்தில்

# கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கை முன்னெடுப்பு



யாழ். மாநகரில் கடைகள், பஸ் நிலையங்கள், நவீன சந்தைத் தொகுதிகள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றில் கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் கடுமையாக முன்னெடுக்கப்பட்டன.

யாழ். மாநகர முதல்வர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரிகள் இணைந்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தினர்.

குறித்த பகுதிகளில் சுகாதார நடைமுறைகள், சமூக இடைவெளி பேணுதல் மற்றும் அரசால் வெளியிடப்பட்டுள்ள கொரோனாக் கட்டுப்பாட்டுச் சட்டங்களை நடைமுறைப்படுத்தினர்.

மேலும், மாநகர சட்ட விதிகளுக்கு முரணாக வர்த்தக நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருள்கள் அப்புறப்படுத்தப்பட்டன.

சமூக இடைவெளி மற்றும் முகக் கவசம், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொதுமக்கள் செயற்பட வேண்டும் எனவும், வெளி மாவட்டத்திலிருந்து யாழ். மாவட்டத்துக்கு வருவோர் கட்டாயமாகத் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வலியுறுத்தினர்.

# கொரோனாவிலிருந்து 344 பேர் குணமடைவு!

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 344 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 249 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள 11 ஆயிரத்து 60 பேரில் 5 ஆயிரத்து 789 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

அத்தோடு 405 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளமையுடன் கொரோனா தொற்றால் இதுவரை 22 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊரடங்கு அமுலிலில்லாத பகுதிகளிலும் நடமாட்டத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, நவ.03

நாட்டில், ஊரடங்கு சட்டம் அமுலில் இல்லாத பகுதிகளில் மக்களின் நடமாட்டங்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர்பாக சுகாதார வழிகாட்டி விநியோகிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சால் குறித்த வழிகாட்டி விநியோகிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது -

நாட்டின் தற்போதைய நிலை 3 ஆவது ஆபத்தான நிலை என்பதால் வீட்டில் இருந்து வெளியேற இரண்டு பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும்.

மேலும், பஸ் மற்றும் ரயில் போன்ற பொது போக்குவரத்தின் இருக்கைக்கு நூற்றுக்கு 75 சதவீதம் வரை அனுமதிக்கப்படுகிறது.

அதேபோன்று அரச மற்றும் தனியார்த்துறை அலுவலகங்களில் குறைந்தபட்ச ஊழியர்களுடன் பணியாற்ற வேண்டும். வியாபார நிலையங்களில் 50 சதவீத வாடிக்கையாளர்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும்.

அத்துடன் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் கல்வி வகுப்புகள் மூடப்பட வேண்டும். நிகழ்வுகள் மற்றும் பொதுக்கூட்டங்களுக்கு அனுமதி கிடையாது. - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் ஆதரவை எதிர்காலத்திலும் பொதுஜன பெரமுன நிச்சயம் பெறும்!

## அந்தக் கட்சியின் தவிசாளர் பீரிஸ் இமாலய நம்பிக்கை

குறுகிய காலத்துக்குள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மக்களாணையை முழுமையாகப் பெற்றுள்ளது. மக்களின் ஆதரவை எதிர்காலத்திலும் பொதுஜன பெரமுன பெறும் என கட்சியின் தவிசாளர் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 4 வருட நிறைவையொட்டி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -.

2015ஆம் ஆண்டு பல்வேறு நோக்கங்களை அடிப்படையாக கொண்டு ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. அரசியல் ரீதியில் பெரும்பாலானோர் தனித்து விடப்பட்டார்கள்.

ராஜபக்ஷக்களின் ஆட்சி நாட்டுக்கு அவசியம் என நாட்டு மக்கள் எதிர்பார்த்தார்கள். அனைவரது அபிலாஷைகளைக் கருத்திற் கொண்டு பசில் ராஜபக்ஷ 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி தாமரை மொட்டு சின்னத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை ஸ்தாபித்தார்.

2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்களின் அரசியல் தீர்மானம் வெளிப்பட்டது. கட்சியை உருவாக்கி குறுகிய காலத்துக்குள் 71 சபைகளைக் கைப்பற்றுகின்றமை சாதாரண விடயமல்ல.

அதனை தொடர்ந்து 2019 நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி இரட்டிப்பானது. சுமார் 69 லட்சம் மக்கள் ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ஷவுக்கு ஆட்சியதிகாரத்தை வழங்கி பலமான அரச நிர்வாகத்தை உருவாக்கினார்கள்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கமசமக பிலிசதர, சுபீட்சமான எதிர் காலம் ஆகிய கொள்கை அடிப்படையில் செயற்பட்டமையால் இடம் பெற்று முடிந்த பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்றுக் கொண்டது.

குறுகிய காலத்தில் பொதுஜன பெரமுன மக்களாணையை முழுமையாகப் பெற்றுக் கொண்டுள்ளது. இது எதிர்காலத்திலும் பாதுகாக்கப்படும்.

# தீயணைப்பு வீரர்கள் ஐவருக்கு கொரோனா!

கொழும்பு தீயணைப்பு மற்றும் மீட்புப் பிரிவில் ஐந்து பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனையடுத்து, அவர்களுடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொழும்பு நகராட்சியிலிருந்து பதிவான அனைத்து கொரோனா நோயாளர்களும் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் பதிவான ஆயிரத்து 767 கொரோனா நோயாளர்களில் ஆயிரத்து 635 பேர் மினுவங்கொடை மற்றும் பேலியகொட கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

# மினுவாங்கொடை கொத்தணியில் 29 நாள்களில் 7 ஆயிரத்துக்கு மேல் கொரோனா தொற்றாளர்!

மினுவாங்கொடை ஆடை தொழிற்சாலையில் ஒக்ரோபர் 3 ஆம் திகதி முதலாவது தொற்றாளர் இனங்காணப்பட்டதன் பின்னர் இந்த மாதத்தில் மாத்திரம் 7 ஆயிரத்து 185 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதற்கு முன்னர் கடந்த ஜனவரி இலங்கையில் முதலாவது தொற்றாளராக சீனப் பெண்ணொருவர் இனங்காணப்பட்டதன் பின்னர் ஒக்ரோபர் 2 ஆம் திகதி வரையான சுமார் 9 மாத காலப்பகுதியில் நாட்டில் மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 382 ஆகவே காணப்பட்டது.

எனினும் ஒக்ரோபர் 3 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதி வரையான 29 நாள்களில் அந்த எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளது. மினுவாங்கொடை இனங்காணப்பட்ட முதல் நாள் தொடக்கம் மாத இறுதி வரை இனங்காணப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கைகளை கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் வெளியிட்டுள்ளது. அதற்கமைய,

ஒக்ரோபர் 3 - 1, ஒக்ரோபர் 4 - 1, ஒக்ரோபர் 5 - 101, ஒக்ரோபர் 6 - 729, ஒக்ரோபர் 7 - 202, ஒக்ரோபர் 8 - 19, ஒக்ரோபர் 9 - 30, ஒக்ரோபர் 10 - 103, ஒக்ரோபர் 11 - 121, ஒக்ரோபர் 12 - 90, ஒக்ரோபர் 13 - 194, ஒக்ரோபர் 14 - 130, ஒக்ரோபர் 15 - 68, ஒக்ரோபர் 16 - 110, ஒக்ரோபர் 17 - 115, ஒக்ரோபர் 18 - 61, ஒக்ரோபர் 19 - 87, ஒக்ரோபர் 20 - 180, ஒக்ரோபர் 21 - 166, ஒக்ரோபர் 22 - 309, ஒக்ரோபர் 23 - 865, ஒக்ரோபர் 24 - 368, ஒக்ரோபர் 25 - 348, ஒக்ரோபர் 26 - 541, ஒக்ரோபர் 27 - 457, ஒக்ரோபர் 28 - 335, ஒக்ரோபர் 29 - 582, ஒக்ரோபர் 30 - 633, ஒக்ரோபர் 31 - 239 என 7,185 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கில் கொரோனாவுக்கு முடிவுகட்ட தீவிர நடவடிக்கை

## கடற்படையினர் விசேட ரோந்து என்கிறார் ஆளுநர்



வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விசேடமாக வடக்கு மாகாணத்தினுள் கடற்பரப்பின் ஊடாக அத்துமீறி நுழைபவர்களைத் தடுப்பதற்காகக் கடற்படையினர் விசேட ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார். இது தொடர்பில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடலோரப் பாதுகாப்பையும் கடந்து யாராவது அத்துமீறி உள்நுழைவார்களாயின் அல்லது உள்நுழைந்து மறைந்திருப்பார்களாயின் கரையோர வாழ் வடபிராந்திய மக்கள் உட்பட யாரும் அருகில் உள்ள பொதுச்சுகாதார அதிகாரிகளிடத்திலோ அல்லது பொலிஸ் நிலையத்துக்கோ தகவல் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அத்துடன் அண்மைய நாள்களில் வெளிமாவட்டங்களிலிருந்து வருகைதந்தவர்கள் தங்களைத் தாங்களே வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்குவது அவசியமாகின்றது. அதுமட்டுமன்றி அவர்களின் உடல்நிலையில் மாறுபட்ட அடையாளங்களை காணுமிடத்து உடனடியாக வைத்திய பரிசோதனைகளுக்குத்தங்களை ஈடுபடுத்தவதே பொருத்தமானதாகும்.

யாழ். போதனா வைத்தியசாலையிலும், யாழ்.பல்கலைக்கழகத்திலும், பி.சி.ஆர். பரிசோதனைகள் கிரமமாக மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே பொதுமக்கள் இயல்பான சந்தேகங்கள் ஏற்படுமிடத்து எவ்விதமான அச்சமும் அடையாது பரிசோதனைகளுக்கு தங்களை உட்படுத்திக் கொள்ள முடியும்.

இதைவிட, அனைத்துப் பொதுமக்களும் பொதுவெளியில் நடமாடுவதை இயன்றளவில் தவிர்ப்பதுடன், முகக் கவசம் அணிதல், கை சுத்திகரிப்பு திரவத்தை பயன்படுத்தல், சமூக இடைவெளிகளைப் பேணுதல் ஆகிய மூன்று விடயங்களையும் பின்பற்றுதலும் அவசியமானதாகின்றது.

சமூகப் பொறுப்புடன் வடக்கு வாழ் ஒவ்வொரு பிரஜைகளும் நடந்து கொள்வதுடன் மக்கள் கூடும் இடங்களில் பொலிஸார் மற்றும் பொதுசுகாதரப் பணியாளர்கள் விசேட கவனம் கொண்டிருப்பதும் அவசியமாகின்றது. அதற்குரிய அறிவுத்தல்களையும் நான் வழங்கியுள்ளேன்.

மங்கல, அமங்கல நிகழ்வுகளின் போது வரையறுக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றுவ அவசியமாகின்றது. அத்துடன் அத்தியாவசியப் பொருள்களுக்குத் திட்டமிட்டு தட்டுப்பாடுகளை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக பாரபட்சமின்றிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது முக்கியமான விடயமாகின்றது. -என்றுள்ளது.

# யாழ். மாநகர உணவகங்களில் அமர்ந்து உணவருந்தத் தடை!

## முதல்வர் கண்டிப்பான உத்தரவு



யாழ்ப்பாணம் மாநகரத்திற்குற்பட்ட உணவகங்களில் அமர்ந்து உணவருந்துவதை முற்றாக இடைநிறுத்த வேண்டும் என யாழ். மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னல்ட் அறிவித்துள்ளார்

யாழ்.மாநகர சபையில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

யாழ்.மாவட்டத்தில் கொரோனா மிக மோசமடைவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. யாழ்.மாவட்டத்துக்கு வெளியே இருந்து வருபவர்கள் தொடர்பாக, இன்றும் மத்திய அரசாங்கம் இறுக்கமான நடைமுறைகளை அறிவித்துள்ளது.

யாழ்.மாவட்டத்துக்குள் வெளிமாவட்டத்தில் இருந்து வருபவர்கள் முறையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். இல்லாவிடின், 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். யாராவது வந்தால், உரிய அதிகாரிகளிடம் அறிவித்தல் விடுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் பஸ்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு, வடமாகாண ஆளுநரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளோம்.

எமது பஸ்களைக் கூட கட்டுப்படுத்தியிருக்கின்றோம். எதிர்வரும் நாள்களில், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருக்கின்றோம்.

யாழ்.நகரப்பகுதிகளில் உள்ள உணவகங்களுக்கு எந்தத் தடையையும் நாங்கள் தற்போது விதிக்கவில்லை. உணவகங்களில் மக்கள் அமர்ந்திருந்து உண்ணுவதற்குரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவகங்களில் தயாரித்த உணவை, பொதிகள் மூலம் வழங்க வேண்டும் என யாழ்.மாநகர சபை சகல உணவக உரிமையாளர்களுக்கும் ஓர் அறிவித்தலை விடுத்துள்ளது.

உணவக உரிமையாளர்கள் இந்த நடைமுறைக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். பொது மக்கள் உணவகங்களில் அமர்ந்திருந்து உண்ணுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்றும், இந்த நடைமுறைகளைக் கண்காணிப்பதற்கு, பொலிஸ் அதிகாரிகளை நியமித்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

நகரப் பகுதியில் உள்ள கடை உரிமையாளர்கள் ஒத்துழைப்பு வழங்கத் தவறுவார்களானால், அந்தப் பகுதிகளையும் சுய தனிமைப்படுத்தலுக்குட்படுத்த உத்தேசித்துள்ளோம்.

இறுக்கமான நடவடிக்கைகளை முன்னெடுக்க நேர்ந்தால், அத்தியவசியப் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு விசேட அனுமதி வழங்கவுள்ளதுடன், மட்டுப்படுத்தப்பட்ட மக்கள் நடமாட்டத்தை முன்னெடுப்பதற்கும், ஆலோசித்து வருகின்றோம். நிலைமை மோசமடைந்தால், இந்த நடைமுறைகளைக் கொண்டு வருவதற்கும், சகல ஏற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளோம். - என்றார்.

# மேல்மாகாணத்தில் வேகமாக பரவுகின்றது கொரோனா!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு




மேல் மாகாணத்தில் கொரோனாத் தொற்று கொத்தணியானது மிகவும் வேகமாக பரவுகின்றதென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அஜித் ரோஹண மேலும் கூறியுள்ளவை வருமாறு -

கொரோனா தொற்று மிக விரைவாக பரவுவதால், மேல் மாகாணத்தில் வாழும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

மேலும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தாத பிரதேசங்களில் வசிக்கும் மக்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது அவசியம்.

இதேவேளை, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கையானது நேற்றுமுன் தினம் வரை 125 ஆக உயர்வடைந்துள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் கொண்டே குழுவே, இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இவர்கள் நான்கு முதல் ஐந்து நாள்களுக்கு முன்னர் தனிமைப்படுத்தப்பட்டனர். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் கொரோனா தொடர்பான கலந்துரையாடல்

மட்டக்களப்பு, நவ.03

வாழைச்சேனை பொலிஸ் பிரிவு முழுவதும் ஒன்பது நாள்களாகத் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டு காணப்பட்டு வருகின்ற நிலையில் வாழைச்சேனை பிரதேசத்துக்கான உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜி.சி.என்.ஜெய சுந்தர தலைமையில் விசேட கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரீ.நஜீப்கான், ஓட்டமாவடி பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ், வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன, மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் உள்ள மக்களை சுகாதார பிரிவினர், பாதுகாப்பு படையினர், அரச அதிகாரிகள் மாத்திரம் கட்டுப்பட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாது.

பொது மக்கள் கூடிய பங்களிப்பு வழங்கினால் மாத்திரம் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முடியும் என்று கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரீ.நஜீப் கான் தெரிவித்தார்.

அத்தோடு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கண்டுபிடிக்கப்பட்ட கொரோனாத் தொற்றாளர் ஓட்டமாவடி பாத்திமா பாலிகா வித்தியாலயத்தில் உயர்தர பரீட்சையில் கடந்த 26ஆம் திகதி தோற்றினார் எனவும், இவரது பரீட்சை மண்டபத்தில் 53 பேர் பரீட்சை எழுதினர் எனவும் ஆரம்பகட்ட விசாரணையின் அடிப்படையில் தகவல் நிலையில் இவர்கள் தொடர்பான விவரங்கள் திரட்டி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் நடமாடும் வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் வியாபாரிகள், பொதுமக்கள் அதிகம் நின்று பொருள்களை விற்பனை செய்யாத வகையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் நிபந்தனைகளை மீறி வெளியில் வருபவர்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சுகாதார பிரிவினர், பாதுகாப்பு படையினர், அரச அதிகாரிகள் முழு நேரமும் கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

# சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை மக்கள் தொடர்ந்தும் பின்பற்றவேண்டும்!

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரிக்கை

ஹட்டனில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 10 தொற்றாளர்களே இதுவரை அடையாளம் காணப்பட்டனர். 80 பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் 'நெகடிவ்' என வெளிவந்துள்ளன இது மகிழ்ச்சியளிக்கின்றது.

எனினும், மக்கள் தொடர்ந்தும் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றவேண்டும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

புரட்டொப் வீதியைப் புனரமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நேற்று (2.10.2020) கலந்துகொண்டு கருத்துத் வெளியிடுகையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த வீதியை வைத்து சிலர் அரசியல் செய்தனர், எனினும், எனது தந்தையின் வேண்டுகோளுக்கமைய வீதியைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. பணிகள் ஆரம்பித்து நடவடிக்கைகள் இடம்பெறுகையில், நல்லாட்சி எனக் கூறிக்கொள்ளும் அரசாங்கம் வந்த பின்னர் பணிகள் நிறுத்தப்பட்டன.

எனினும், தற்போதைய ஆட்சியின் கீழ் பணிகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. பெருந்தோட்டப்பகுதிகளில் 384 கிலோமீற்றர் தூரத்தை புனரமைப்பதற்கு அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா ஆகியோர் அனுமதி வழங்கியுள்ளனர். அவர்களுக்கு நாம் நன்றி கூறியாக வேண்டும்.



நுவரெலியா – டன்சின் பாதை மற்றும் கெமினிதன் வீதி ஆகியனவும் நிச்சயம் புனரமைக்கப்படும். வரவு – செலவுத் திட்டத்தில் அதற்கான நிதி ஒதுக்கீடுகள் இடம்பெறும்.

அதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்குத் தேவையான நிவாரணப்பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. நேற்றுமுன்தினமும் வழங்கினோம், நேற்றும் வழங்கப்பட்டன. பணிகள் தொடரும்.

ஹட்டனில் 10 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையையடுத்து வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, நகரத்தை மூடுமாறு வர்த்தகர்களிடம் கேட்டோம். அதற்கு ஒத்துழைப்பு வழங்கினர். இதனையடுத்து 80 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

முடிவுகள் 'நெகடிவ்' அதாவது வைரஸ் தொற்றவில்லை என வந்துள்ளது. இது திருப்தியாக இருக்கின்றது. எனினும், நாம் தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும். – என்றார் ஜீவன் தொண்டமான்.

## இலங்கை - இந்திய...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறானதொரு கூட்டத்திற்கு அமிர்தலிங்கம் ஒரு முறை வந்த பொழுது, நான் அவருடன் கலந்துரையாடிய வேளையில் அவரிடத்தில் *"ஜே. ஆரின் தந்திரங்களைத் தெரியாமல், மீண்டும் மீண்டும் சர்வகட்சிக் கூட்டம் என்று சுரணையில்லாமல் வருகிறீர்களே..? ஜே.ஆர். எதற்கும் இணங்குவார் என்ற நம்பிக்கை உங்களுக்குண்டா ? இதனை நீங்கள் இந்திரா காந்திக்குச் சொல்லி மீண்டும் மீண்டும் அவமானப்பட முடியாது என்று நின்று விட்டால் என்ன...?"* எனக் கேட்டேன்.

அமிர்தலிங்கம் மிகவும் மனவேதனையுடன், *"இது நான் சொல்லாததா..? எவ்வளவோ விளங்கப்படுத்தினேன். ஆனால், இந்திரா காந்தியோ, 'அமிர் எனக்கு ஜே.ஆரின் நரித்தனம் தெரியாததல்ல. அந்த நரிக்கும் நான் அவகாசங்களைக் கொடுக்க வேண்டும். இது தான் இப்படியான ஒத்திகைக்கு நீங்கள் போகப் போவது கடைசி' என்றதால்தான் மீண்டும் வந்தேன்."* – என்று சொன்னார்.

அதுமட்டு மல்ல, தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கப்படுகிறது, பிரச்சினைகளுக்கு தூபமிடுகின்றனர் முதலான குற்றச்சாட்டுக்கள் இலங்கையாலும் அதன் நேச நாடுகளினாலும் சர்வதேசத்தில் இந்திரா காந்திக்கு எதிராக முன்வைக்கப்பட்டன.

அவையெல்லாவற்றையும் அவர் சமாளிக்க வேண்டியிருந்தது. இந்திரா காந்தி தங்களது புலனாய்வு அமைப்புகளினூடாக விடுதலைப் போராளிக் குழுக்கள் எல்லாவற்றினோடும் பேச்சுக்கள் நடத்தினார்.

அவர் பலமுறை முயன்றும் சந்திக்காத ஒருவர் தலைவர் பிரபாகரன். அதற்கான முயற்சியை எடுக்குமாறு அமிர்தலிங்கமும் சிவசிதம்பரமும் அன்று என்னை கேட்டுக் கொண்டார்கள். ஒரு முக்கிய நிபந்தனையை இந்திய தரப்பு வைத்திருப்பதாகவும் அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

அது, இந்திராகாந்தி, பிரபாகரனை மாத்திரமே – முக்கியமாக அன்டன் பாலசிங்கம் இல்லாமலேயே சந்திப்பார் என்பது. பிரபாகரனுடனும் பாலசிங்கத்துடனும் எனக்கிருந்த பரிச்சயத்தை ஒட்டி, பிரபாகரனை இதனை ஏற்குமாறும் பாலசிங்கத்தை அதற்கு ஒத்துழைக்கு மாறும் கேட்டு அதனை ஒப்பேற்ற வழிவகைகள் செய்யுமாறு கேட்டனர். எவ்வளவு முயற்சித்தும் அந்த சந்திப்பு பல சாக்குப் போக்குகளினால் சாத்தியமாகவில்லை. ஒரு வேளை அது நடந்திருந்தால் தமிழர்களின் விதி வேறு விதமாக இருந்திருக்குமோ தெரியாது.

தமிழ் விடுதலை இயக்கங்களின் உட்பூசல்களால் இந்திராகாந்தி வருந்தி மனம் சலித்து அமிர்தலிங்கத்துடன் அடிக்கடி ஆதங்கப்பட்டிருந்தார்.

தான் பங்களாதேஷ் விடுதலைக்காக முஜிபுர் ரகுமானோடு மட்டுமே பேச வேண்டியிருந்தது. ஆனால், இங்கோ எத்தனையோ முக்கிபாகினிகள் – ரகுமான்கள் என்பதால் குழப்பமாயுள்ளது என்பது அவரது வருத்தம்.

இது அக்காலங்களில் பரவலாக தெரியப்பட்ட ஒரு செய்தி. எவ்வளவோ முயன்றும் எங்களால், ஒரு மித்த அல்லது ஒன்றுபட்ட தலைமையை அன்றிலிருந்து இன்று வரை சர்வதேசத்திற்கு கொடுக்க முடியவில்லை.

அது எமது துர்வினை!

ஆகவே, தமிழர்களது அபிலாகைளை இந்திராகாந்தியோ அல்லது இந்திய ஆட்சியாளர்களோ அறிந்திருக்கவில்லை என்பது சரியான கணிப்பல்ல .அது சந்தர்ப்பவாதம்.

நாங்கள் நினைப்பது நடக்க வேண்டும். இல்லாவிட்டால் அதனை நடத்தவும் விட மாட்டோம். எப்படியும் அதனை வீழ்த்துவோம் என்ற எமக்குள் இருக்கும் மனப்பாங்கு.

இந்திராகாந்தியும் 1984 இல் காலமானார்.

அதைத் தொடர்ந்து எமது நிர்க்கதிகளில் இந்தியாவை ஈடுபடுத்துவது பற்றி நானும், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் கந்தசாமி, அமிர்தலிங்கம் ஆகியோரும் மற்றையோருடன் தொடர்ந்து பேசினோம்.

1977 ஆம் ஆண்டு நிலைமைகளின் பின்னர், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் (T.R.R.O) தோற்றுவிக்கப்பட்டு, அதனது செயற்பாடுகளால் எங்களிடையேயும் அனைத்து கூட்டணித் தலைவர்களுடனும் விடுதலை அமைப்புகளினோடும் நல்லுறவு இருந்தது. தமிழர் விடிவு சார்ந்த நடவடிக்கைகளில் எங்களோடு பரஸ்பரம் கலந்து ஆலோசித்து எமது ஆதரவோடு இயங்கினார்கள்.

விரிவஞ்சி, அவற்றை யெல்லாம் விலாவாரியாக இங்கே பதிவு செய்யவில்லை.

சில முக்கிய காலகட்டங்களை மாத்திரம் பகிர்கின்றேன்.

இதன் ஒரு படியாக, அமிர்தலிங்கத்தின் விருப்பில் நான் சென்னை சென்று, அனைத்து விடுதலை இயக்கங்களோடும் பேச்சுவார்த்தை நடத்தினேன். இதற்காக முதலில் லண்டன் சென்று கந்தசாமி மற்றும் செயற்பாட்டாளர்களோடும் கலந்துரையாடி ஒரு புரிந்துணர்வுடன் புறப்பட்டேன். லண்டனில் புலிகள் எனக்கு ஒரு நிபந்தனை விதித்தனர். அதாவது மற்றவர்களுடன் கூட்டாக இருந்து பேச மாட்டோம். தங்களோடு முதலில் பேச வேண்டும் என்பதாக அந்த நிபந்தனை அமைந்திருந்தது.

அதற்கு ஏற்ப சென்னையில் இறங்கியவுடன், புலிகளுக்கு தகவல் அனுப்ப, அதற்கு அவர்களிடமிருந்து, 'தங்களுக்கும் செய்தி வந்தது. தாங்கள் வருவோம் 'என்றார்கள். அதன் பின்பு இரண்டு நாள்களாகத் தகவல் ஏதும் இல்லை. ஆனால், நான் யார், யாரைச் சந்திக்கிறேன் என்று அவர்கள் வேவு பார்ப்பதை உணர முடிந்தது.

ஆனாலும் நான் வாக்குக் கொடுத்தவாறு வேறு இயக்கத்தையோ அவர்களது ஆதரவாளர்களையோ சந்திக்கவில்லை.

மூன்றாம் நாள், தொடர்பு கொண்டவர்கள், 'திரு. பழ. நெடுமாறன் பேச விரும்புகிறார்' என்றார்கள். அவர், 'புலிகளை மாத்திரமே தமிழரின் பிரதிநிதிகள் என்று ஏற்றுப் பேச விரும்பினால், பேசலாம்,வருவோம்' என்றார். காரணங்களைச் சொல்லி அதற்கு ஒத்துவரவில்லை என்றேன். 'யோசித்து சொல்லுங்கோ' என்று சொல்லி விட்டுப் போனை வைத்தார்.

( நாளை தொடரும் )

## கொழும்பு பாணந்துறை கடலில் 100 திமிங்கிலம் கரையெதுங்கின



பாணந்துறை கடற்கரையில் நேற்று சுமார் 100 திமிங்கிலங்கள் கரையொதுங்கியுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு திமிங்கிலங்கள் கரையொதுங்கியுள்ள நிலையில் அவற்றை மீண்டும் கடலுக்கு அனுப்புவதற்கான முயற்சிகளை பொலிஸார், இலங்கை கடலோர காவல்படையினரின் உதவியுடன் முன்னெடுத்து வருகின்றனர்.

கரையொதுங்கியுள்ள திமிங்கிலங்கள் 10 முதல் 25 அடி நீளமுடையவை என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட போதிலும் திமிங்கலங்களை பார்வையிட மக்கள் கடற்கரையில் கூடியுள்ளனர்.

## நடைபாதை வியாபாரத்துக்கு தடைவிதிப்பு மீறினால் தனிமைப்படுத்தல் சட்டம் பாயும்!

### பொதுச்சுகாதார பரிசோதகர் சங்கத் தலைவர் ரோஹண தெரிவிப்பு

கொழும்பு, நவ.03

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில், வீதியோரங்களில், மூடியிருக்கும் கடைத் தொகுதிகளுக்கு அருகிலிருந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறும் பட்சத்தில், குறித்த நபர்களுக்கெதிராக தனிமைப்படுத்தல்சட்டத்தின்கீழ்வழக்கு தாக்கல் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஊரடங்கு காலப் பகுதிகளில், இந்தச் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படுமென இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

## மூடையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவிக் காலம் வரும் 12 ஆம் திகதி முடியவுள்ள நிலையில், அவரது அலுவலத்தில் உள்ள அனைத்துப்பொறுப்புக்களையும்ஒப்படைத்து விட்டு செல்வற்கான ஆயத்தங்களை அவர் முன்னெடுத்து வருகின்றார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமையால், தேர்தல்கள் ஆணைக்குழுவில் புதிய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

தேசிய தேர்தல்கள் ஆணையகத்தின் ஏனைய இரு உறுப்பினர்களும் முன்னதாகவே தங்கள் அலுவலங்களைக் காலி செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையிலேயே மஹிந்த தேசப்பிரியவும் தனது அலுவலகத்தைக் காலி செய்வதற்கான நடவடிக்கைகளை தற்போது முன்னெடுத்துள்ளார்.

மஹிந்த தேசப்பிரிய தேர்தல் அலுவலகத்தில் சுமார் 37 வருட காலம் சேவை புரிந்துள்ளார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சடடத்தின் கீழ் ஐந்து புதிய ஆணையர்கள் தேசிய தேர்தல்கள் ஆணையகத்தில் நியமிக்கப்படுவார்கள். இது 19 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட 3 உறுப்பினர்களை விட அதிகபடியான எண்ணிக்கையாகும்.

# மரநடுகை மாதத்தை முன்னிட்டு இம்முறை வீடுகளுக்குச் சென்று மரக்கன்றுகள் நடுகை

## தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஆரம்பித்தது





வடமாகாண மரநடுகை மாதம் ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டுத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வீடுகளுக்குச் சென்று மரக்கன்றுகளை நடுகை செய்து கொடுக்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதன் தொடக்க நிகழ்ச்சி நேற்று ஞாயிற்றுக் கிழமை (01.11.2020) சிறுப்பிட்டி மேற்கு பார்வதி பரமேஸ்வரன் ஆலய முன்றலில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கொரோனா இடர்க்கால சுகாதார நடைமுறைகள் காரணமாக குறைந்த எண்ணிக்கையானோர் மாத்திரமே அழைக்கப்பட்டிருந்தனர். இதன்போது ஆலய முன்றலில் சிவன் ஆலயங்கள் பலவற்றில் தல விருட்சங்களாகப் போற்றப்படுகின்ற புன்னை மரக்கன்று நடுகை செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து அப்பகுதியிலுள்ள வீடுகளுக்கு நேரடியாகச் சென்று மரக்கன்றுகளை நடுகை செய்யும் செயற்பாடு ஆரம்பமாகியது.

இது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் தெரிவிக்கையில்,

மரநடுகை மாதத்தை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் கார்த்திகையில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் மரநடுகையை மேற்கொள்வதோடு, நல்லூர் சங்கிலியன் பூங்காவில் மலர்க் கண்காட்சிகளையும் ஏற்பாடு செய்து வருகிறது. தினமும் கண்காட்சியைப் பார்வையிட வருகின்ற மாணவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகளை வழங்குவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளோம். ஆனால், தற்போது நாட்டில் நிலவுகின்ற கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக மக்கள் அதிகமான எண்ணிக்கையில் கூடுவதைத் தடுக்கும் நோக்குடன் மரநடுகையைப் பெரும் நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்வதைத் தவிர்த்திருக்கிறோம். மலர்க் கண்காட்சியையும் இம்முறை தவிர்த்திருக்கின்றோம்.

நிகழ்ச்சிகளைத் தவிர்த்தாலும், மரக்கன்றுகளை நடுகை செய்வதை நிறுத்த விரும்பவில்லை. அதனால், இம்முறை மரக்கன்றுகளை எங்களிடம் கேட்டிருப்பவர்களுக்கு அவர்களின் வீடுகளுக்கு நாங்கள் நேரடியாகவே சென்று வீட்டுச் சூழலுக்கு ஏற்ற பொருத்தமான மரத்தைத் வழங்கி நாங்களே முன்னின்று நடுகை செய்யும் செயற்பாட்டை முன்னெடுத்திருக்கின்றோம். இவற்றை ஒரு வருடத்துக்குத் தொடர்ச்சியாகக் கண்காணித்து சிறப்பாக மரக்கன்றுகளை பராமரித்து வளர்ப்பவர்களுக்குப் பரிசுகளை வழங்கும் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

ஒவ்வொரு வருடமும் பல்லாயிரக்கணக்கான மரக்கன்றுகளை நாம் இலவசமாக வழங்கி வருகின்றோம். கொரோனாவைக் காரணங்காட்டி இம் மரக்கன்றுகளின் எண்ணிக்கையைக் குறைப்பதையும் நாம் விரும்பவில்லை. எங்களிடம் பொது அமைப்புகளும் ஆயிரக்கணக்கான மக்களும் மரக்கன்றுகளைக் கேட்டுள்ளார்கள். எங்களிடம் மரக்கன்றுகளைப் பெற்று அதனை மறு விநியோகம் செய்பவர்களைத் தவிர்த்துத் தாங்களே மரக்கன்றுகளை நட்டுப் பராமரிப்போம் என்று உத்தரவாதம் தரும் பொது அமைப்புகளுக்கும் பொது மக்களுக்கும் மாத்திரமே மரக்கன்றுகளை வழங்குகின்றோம். தேவையானோர் எம்முடன் தொடர்புகொள்ளலாம் என்றும் தெரிவித்தார்.

# இந்தியத் தூதர ஊழியருக்கும் கொரோனா

இந்தியத் தூதரகத்தின் ஊழியர் ஒருவர் கொரோனாவைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் துணைப் பணியாளரே கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார். தற்போது அவர் இலங்கை அரசால் ஒதுக்கப்பட்ட பகுதியில் மருத்துவ சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட ஊழியரின் பணி காரணமாக அவர் தூதரக அலுவலகத்துடனும் அதிகாரிகளுடனும் சிறியளவுக்கே தொடர்பில் இருந்தார் எனத் தெரிவித்துள்ள தூதரகம், அவருடன் தொடர்பிலிருந்த மிகக் குறைந்த எண் ணிக்கையிலானவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உருவாகி வந்த சூழ்நிலை காரணமாக தூதரகம் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான ஊழியர்களுடனேயே சில வாரங்களாக இயங்கி வருகின்றது எனவும் தூதரகம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

# ரயிலுடன் மோதி குடும்பஸ்தர் பலி

எலுவன்குளம் - அருவக்காடு பகுதியில் ரயிலுடன் மோதுண்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இன்று அதிகாலை சுண்ணாம்புக்கல் சுமந்து சென்ற ரயிலுடன் மோதுண்டே இவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் வனாத்து வில்லு பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை என விசாரணைகளின் வாயிலாகத் தெரியவந்துள்ளது. உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# தூசு, துகள்களின் செறிவு அதிகரிப்பு சுவாச நோயாளர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, நவ.03

நாட்டின் வளிமண்டலத்தில் தூசு துகள்களின் செறிவு அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய தென் மாகாணம் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் தூசு துகள்களின் செறிவு அதிகரித்துள்ளதாக ஆய்வு நிறுவகத்தின் சிரேஷ்ட நிபுணர் பேராசிரியர் சரத் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கடந்த மாதம் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் வளி மாசடைதல் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தூசு துகள்களின் செறிவு 100 முதல் 150 ஆக அதிகரித்துள்ளதாகவும் இதனால் சுவாச நோயாளர்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கைக்குஅண்மையநாடான இந்தியாவில்ஏற்பட்ட வளிமாசடைவு மற் றும் நாட்டின் வளிமண்டல எல்லைப்பகுதியில்ஏற்பட்டமாசடைவு ஆகியன இதற்குக்காரணம் என்றும் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

# கை விரல் அடையாளம் பதிவு செய்யும் கருவியூடாக கொரோனா பரவும் அபாயம்!

## அச்சத்தில் அரச உத்தியோகத்தர்

யாழ். மாவட்டத்திலுள்ள அரச அலுவலகங்களில், உத்தியோகத்தர்களின் வரவைப் பதிவு செய்வதற்கு தற்போதும் கைவிரல் அடையாளம் பதிவுசெய்யும் கருவி பயன்படுத்தப்படுவது தொடர்பாக உத்தியோகத்தர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் அதிகமாக பரவிவரும் நிலையில் இவ்வாறான கைவிரல் அடையாளம் பதிவுசெய்தல் தமக்குப் பாதிப்பாக அமைகின்றது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், யாராவது ஓர் உத்தியோகத்தருக்கு கொரோனா தொற்று இருக்கும் பட்சத்தில் அது அனைவரையும் பாதிக்கும் எனவும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அதாவது, கடந்த யுத்த காலத்தில்கூடஎந்தவிதஅச்சமும்இன்றி நாம் பணியாற்றினோம். அப்போது வரவுப் பதிவேடு மாத்திரமே இருந்தது. நிர்வாக உத்தியோகத்தர்கள் காலை 9மணிக்கும் மதியம் 12.30 மணிக்கும் சிவப்பு அடிக்கோடிடுவர். இதன் மூலம் நேர்த்தியாக வரவு பதிவு செய்யப்பட்டது எனவும் உத்தியோகத்தர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கொரோனாவைரஸ்தொற்று கட்டுப்படுத்தப்படும் வரை கை விரல் அடையாளம் பதிவுசெய்யும் இயந்திரங்களை நிறுத்தி வைக்க அதிகாரிகள்நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


## தேவை

மில் ஒன்றினை நிறுவுவதற்கு தேவையான பாவித்த நல்ல நிலையில் உள்ள அரிசி, மிளகாய் ஆகியன திரிப்பதற்கான இயந்திரங்கள் தேவை.
விற்க விரும்புவோர்
தொடர்பு கொள்ளவும்
0777323156
0763899554

## கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி – 1981.08.06 | பிறந்த திகதி – 1990.01.29 |
| மதம் – இந்து V | மதம் – இந்து V |
| நட்சத்திரம் – சித்திரை 4 | நட்சத்திரம் – சதயம் |
| பாவம் – 41 1/4 | பாவம் – 49 3/4 |
| கல்வி – U.K பட்டதாரி | கல்வி – M.B.B.S |
| தொழில் – U.K PR | தொழில் – Doctor |
| எதிர்பார்ப்பு – படித்த அழகான பெண். | எதிர்பார்ப்பு – கொழும்பில் வேலை பார்க்கும் Doctor or Engineer மணமகன் தேவை. |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள். முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம், சந்தை வீதி, இலையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாவுக்குப் பின்னரான உலகம்
# இயற்கைக்கான தருணம்

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 1-30, 2020



## ஆளுக்கொரு மரம் நடுவோம்
## நாளுக்கொரு வரம் பெறுவோம்

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்